# ஞான மணி மாலை



ஆன்மீகச் செம்மல்

ஞானசற்குரு **சிவ செல்வராஜ்**

**தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.


# ஞான மணி மாலை





ஆன்மீகச் செம்மல்

ஞானசற்குரு **சிவ செல்வராஜ்**

**தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.

## காணிக்கை

தங்க ஜோதி ஞான சபை தந்தவள்
தரிசனம் தந்த தங்க கன்னி!
அகில லோக நாயகி குமரி அன்னை
உலகுயிர்க்கெல்லாம் தாய்
சித்தர்கள் போற்றும் வாலை
எம்மை காக்கும் தெய்வம்
கன்னியாகுமரி பகவதி அம்மன் பொற்
பாதங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்



திருவுரு காட்டி திருவடி சேர்த்தாயே
அருவுரு பார்த்து அறிந்து சிறக்கவே
வருமொரு மையன்பர் வரம்பல பெறவே
குருவுரு வாக்கியே குமரியிலே வைத்தாயே

# ஞானமணி மாலை



ஆன்மீக செம்மல்

## ஞானசற்குரு சிவசெல்வராஜ்


தங்கஜோதி ஞான சபை அறக்கட்டளை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
17-49, P, கலைஞர் குடியிருப்பு,
கன்னியாகுமரி - 629 702
www.vallalyaar.com
Cell : 9245153454

## பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | ஞான மணி மாலை |
| ஆசிரியர் | : | சிவசெல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் |
| வெளியிடுவோர் | : | தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49, P, கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629702 |
| முதல் பதிப்பு | : | 2010 - 2000 பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | : | 2014 தைப்பூசம் - 2000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 50 |
| உதவியவர்கள் | : | S. தங்கம், S.S. சுயம்ஜோதி |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>நாகர்கோவில்.<br>Ph: 04652 - 233853 |



**இணையில்லா ஞான இணையதளம்!**

**www. Vallalyaar.com**

ஞானநூற்களின் ஞான இரகசியங்கள்!

சித்தர்கள் கூறும் பரிபாஷைகள்!

உண்மை ஞான விளக்கங்கள்!

மெய்ப்பொருள் அறிய பாருங்கள்!

இது உங்களின் ஆன்மீக வழிகாட்டி!





**தங்க ஜோதி ஞான சபை அறக்கட்டளை**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.


## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக!

அடியேன் எழுதிய செந்திலாண்டவர் பாமாலை, சன்மார்க்க தெய்வம், சற்குரு கோவிந்த சுவாமிகள், அருட்பெருஞ்ஜோதி அந்தாதி ஆகிய நான்கு ஞான நூற்களின் தொகுப்பே இந்த நூல்!

ஆன்மீக சாதனையாளர்களை சோதித்து கரையேற்றும் ஞான பண்டிதன், ஆண் பெற்ற பிள்ளை ஆண்பிள்ளை, சிவ சுப்பிரமணிய சுவாமி! சண்முகன்! நம்மைப் பெற்றது பெண்ணல்லவா! அதனால் நாம் அனைவரும் ஆன்மாக்கள் பெண் பிள்ளையே!

முருகன்! திருச்செந்தூரிலே கடற்கரையிலே கம்பீரமாக காட்சிதரும் கருணைக்கடல்! பால சுப்பிரமணியர்! அடியேன் உள்ளத்தில் தோன்றிய பாடல் முதலில்! மகிழ்வுடன் படைத்தது! செந்திலாண்டவர் பாமாலை!

ஆன்மீக வாழ்வுக்கு எப்படி நாம் இருக்க வேண்டும்! ஒரு சாதகன் எப்படி வாழ வேண்டும் என கற்பித்து தருகிறார் இந்த சபரிமலை அமர்ந்த ஜோதிஸ்சொரூபன் ஐயப்ப சுவாமி! மனிதன் சன்மார்க்க நெறியில் தன்னை ஈடுபடுத்திட வழிகாட்டுகிறார் சபரிமலை ஞானி ஐயப்பன்! அடியேன் மகிழ்ந்து படைத்த பாடல்கள்! சன்மார்க்க தெய்வம்!

சாவின் விளிம்பில் நின்ற போது அடியேனை தடுத்தாட்கொண்ட தன்னிகரில்லா சித்தர்! கன்னியாகுமரி வாலையை வலம் வந்தபோது வலிந்து வந்து ஆட்க் கொண்ட கருணைத் தெய்வம்! நேரில் வந்து நல்வழி காட்டி, வாலை அருள்பெற தந்திரம் கூறிய இணையிலா ஞானி! வாலையை தரிசிக்கும் பெரும்பேறு கிட்டியது இவராலே! அடியேன் உருகி பாடிய 100 அந்தாதி பாடல்கள்! சற்குரு கோவிந்த சுவாமிகள்!

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் போற்றி பணிந்து அடியேன் பாடிய அந்தாதி! அருட்பிரகாச வள்ளல் அருளால்

அறிந்தேன் ஞானம்! அடைந்தேன் சன்மார்க்கம்! உலகுக்கு ஒருவனே! உள்ஒளி ஜோதியே! எம்மை காத்து அருளி, உலகருக்கு மெய்ப்பொருள் அறிவிக்க சற்குருவாக்கி, கன்னியாகுமரியில் தங்கஜோதி ஞானசபையில் அமர்த்தியுள்ளார்! அடியேன் பாடிப்பரவிய பாடல்கள்! அருட்பெருஞ்சோதி அந்தாதி!

தனித்தனியாக முதலில் வெளியிட்டேன்! இப்போது இணைத்து வெளியிடுகிறேன்! உங்கள் பார்வை இதில் பட்டால் நிச்சயம் பலன் உண்டு! எல்லாமே ஞானம்! ஞானத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை! அதனால்தான் இந்நூலுக்கு "ஞானமணிமாலை" என பெயரிட்டான் "வாலை"

இந்நூல் வெளியிட உதவிய அன்பு உள்ளங்கள் திருமதி தங்கம் சிவ செல்வராஜ், S.S. சுயம்ஜோதி.

என்றும் உண்மையுள்ள
**சிவ செல்வராஜ்**





## சிவசெல்வராஜ் எழுதிய "கண்மணிமாலை" யை வாழ்த்திய வள்ளல் பெருமான்!

1992-ல் வள்ளல் பெருமான் அடியேனை "கண்மணிமாலை" என்னும் ஞான நூலை எழுத வைத்தார்! காலங்காலமாக எல்லோராலும் மறைத்து இரகசியமாக கருதப்பட்ட ஞானத்தை கண்மணிமாலையில் வெட்ட வெளிச்சமாக எழுதி வெளியிட வைத்தார் வள்ளல் பெருமான்! இது ஓர் ஆன்மிக புரட்சி என்றே கூறுவேன்! இன்றும் எம்மைப் போன்று வெளிப்படையாக சொல்வார் யாருமில்லை! வள்ளலார் கொடுத்த ஊக்கம் அடியேனுக்கு!

150 ஆண்டுக்கு பிறகு "கண்மணிமாலை" என்றொரு நூல்வரும் என கருதி வள்ளல் பெருமான் அன்றே திருவருட்பாவில் ஒரு கவி பாடியுள்ளார்! இது யான் பெற்ற பெரும் பாக்கியம்! இந்த பிறவியே புனிதம் அடைந்ததாக கருதுகிறேன்!

"கண்மணிமாலை"யின் பெருமையை வள்ளல் பெருமானே போற்றுகின்றாரெனில் அதை எழுதத் தூண்டி - எமக்கு அருள் புரிந்த அருள் வள்ளல் ஞானவள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்! அவர் செய்த பணியை எம்மை செய்ய வைத்துள்ளார்! அவர் இட்டபணியை செய்வதேயாம் செய்யும் காட்டும் நன்றியாக கருதுகிறேன்!

திருவருட்பா இரண்டாம் திருமுறை - திருச்சாதனத் தெய்வத்திறம் - 2வது பாடல்

கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
**கண்மணிமா லைக்**கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்.

வேணும் சுயம்

## ஞானசற்குரு
## ஸ்ரீசிவஸ்ரீ சிவசெல்வராஜ் அவர்களின் பொன்விழாவின் போது அன்பர்கள் வழங்கிய வாழ்த்துப்பா!

பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின்
புகழ்விளங்க வந்த அய்யனே
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப்
புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை
மானுடர்க் களிக்க எண்ணியே
மாதவத்தி வாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த
**மாகுரு சிவசெல்வ ராஜரே**
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே
கருமணியுள் கனலு மாகியே
கருவரையும் கல்லரையும் காத்தருளும் கடவுளெனக்
கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும்
ஆக்ஷித்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானபீடம்
அற்புத மெய்ஞ்ஞான குருபரா!




## ஞான சற்குரு சிவசெல்வராஜ் அருளிய 28 நூற்கள்

**ஆன்மீகப் புரட்சி ஆரம்பம்**
**ஆன்மீக தெளிவு அளித்தது**
**ஆன்மா உணர்த்திய அன்னைக்கு**
**ஆன்ம நேயத்துக்கு ஒரு**
**சன்மார்க்க நெறியை அறிய**
**சன்மார்க்க நெறி நின்ற சற்குரு**
**சன்மார்க்க குருக்களுக்கு சாற்றினேன்**
**சன்மார்க்கி இவனென சாற்றுமே**
**ஞானம் அருள்வான் ஞான பண்டிதன்**
**ஞானம் வேண்டின் ஞாலம் உணர**
**ஞானம் தருவார் ஞானவள்ளல்**
**ஞானம் பூரணமாக ஞான நூல்**
**சித்தம் தெளிந்த சித்தர்களுக்கு**
**சித்தர் இவரும் சிறந்தவரே**
**சித்தர் இவர் சிறப்பு சீரியதே**
**சித்தர் வழியில் சிவசெல்வராஜ்**
**சனாதன தர்மம் உரைப்பது**
**சனாதன தர்ம நெறி வழியில்**
**சனாதன தர்மம் இதுவே**
**சனாதனதர்மமே சன்மார்க்கம்**

**மரணமிலா பெருவாழ்வுக்கு**
**ஆன்மீக நிலை உணர**
**வள்ளலார் அருளியது**
**ஆன்மாவை அறிய**
**ஞானம் தருவது**

**கண்மணி மாலை**
**அருள்மணி மாலை**
**ஸ்ரீபகவதி அந்தாதி**
**அருட்பெருஞ்ஜோதி அந்தாதி**
**சன்மார்க்க தெய்வம்**
**கோவிந்த சுவாமிகள்**
**அஷ்டமணி மாலை**
**செல்வமே சீர் தாருமே**
**செந்திலாண்டவன் பாமாலை**
**அன்பு உதய மலர்**
**வள்ளலார் விழியே**
**ஜோதிமணி மாலை**
**ஜோதி ஐக்கூ அந்தாதி**
**சற்குரு ஜக்கி வாசுதேவ்**
**சத்திய சாயி பாபா**
**சனாதன தர்மம்**
**வள்ளல் யார்**
**இயேசு எழுவது**
**ஞானக்கடல் பீர்முஹம்மது**
**திருவருட்பா மெய்ஞ்ஞான உரை** (4 பாகங்கள்)
**சாகாக்கல்வி**
**மந்திரமணி மாலை**
**திருவருட்பா தேன்**
**அகர உகர மாலை**
**ஞான மணி மாலை**







# செந்திலாண்டவன் பாமாலை



**ஓம் சரவணபவ**

## திருச்செந்தூர் பால சுப்பிரமணிய சுவாமி

ஆறுபடை வீடுகளில் வித்தியாசமாக கடற்கரையில் உள்ள ஒப்பற்ற புண்ணிய ஸ்தலம் திருச்செந்தூர்.

எமது சிறுவயது முதலே எம் பெற்றோர் அடிக்கடி நமது குலதெய்வம் திருச்செந்தூர் முருகன்தான் என சொல்லக் கேட்டதுண்டு!

என்னை அறியாமலே என்னை ஈர்த்த இடம் செந்தூர். அடிக்கடி போவேன். என்னவெல்லாமோ கேட்க நினைத்து உள்ளே போனால், அந்த செந்திலாண்டவனைப் பார்த்து மெய்மறந்து நின்று விடுவேன்! பல வருடமாக இதே நிலைதான்!

கடற்கரை ஆண்டி என்னை சரியாக கவனித்து விட்டான்! கூப்பிட்டு அருள்பாலித்தான்! கும்பிட்டு மகிழ்ந்தேன். கோவிலிலும், கடற்கரையிலும் கண்ட அதிசயம் அருள் விளையாட்டு பலப்பல! முருகனின் லீலைகள் ஞானமே!

ஞானத்தை வழங்கும் ஞானபண்டிதன், எல்லோரையும் சோதித்து தக்கபடி அருள்பாலிக்கும் தேவ சேனாதிபதி. வீரபாகுவை அனுப்பி விளையாட்டு புரிந்திடுவான்.

என்னவென்று சொல்வேன்! ஒன்றா? இரண்டா? செந்திலாண்டவனின் திருவிளையாடல்கள்!

என்னை ஆன்மீக பாதையில் பீடுநடை போட வைத்த தெய்வம்! வா என்று கூப்பிட்டு அருள்தந்த தெய்வம்!

செந்திலாண்டவனை எண்ணி உருகிய பாமாலை வெளியிட வேண்டும் என்ற தணியாத தாகம் இப்போது நிறைவேறுகிறது.

ஞான பாதையை தொடங்க அருள்வேண்டி ஒவ்வொருவரும் முதலில் பணிய வேண்டியது ஆறுமுகனிடமே! அருள்வான் அழகன். பணிவோம் அவன் பாதம்!

**ஓம் சரவணபவ**



# செந்திலாண்டவன் பாமாலை

## காப்பு

தூண்டுகை விநாயகன் துணை செந்தூர்
ஆண்டவன் புகழ்பாட அகமிருந்து அருள்வான்
ஆண்டாண்டு காலமாய் அவனியிலே அடியாரை
ஆண்டுகொண் டிருக்கும் ஆனைமுகன் காப்பாம்

## நூல்

திருச்செந்தூர் நின்றருளும் திருக்குமரா முருகா
அருச்சிக்கிறேன் பாக்களால் அனுதினமும் உன்னை
திருச்சிற்றம்பலம் ஒளிரும் திருவடியே அழகே
திருச்சீரலைவாய் திகழும் தேவாதிதேவே கந்தா

முருகா என்றதும் மன அலை ஓய்கிறதே
உருகுதே உள்ளம் உணர்வெலாம் குமரனே
கருகாதா துன்பம் கந்தா என்றாலே
குருநாதா எந்தன் குலதெய்வம் நீயன்றோ

கடற்கரை ஆண்டி கடம்பா காப்பாயே
உடற்கூறு அறிந்து உன்னத தவமாற்றவே
இடரேதும் வராதுநீ இருப்பாய் இதயமே
சடாச்சரம் உணர்ந்து சர்வக்ஞன் ஆக்குவாயே

சூரனை அழிக்க சூலாயுதம் வேலாயுதமாக
வீரனை வீரபாகுவை விளையாற்ற துணையாக
மாறனை எரித்த மாதேவனே பாலனாக
சீரலை வாய்வந்து சிவசுப்ரமண்ய மானானே

அருணகிரிக்கு தாண்டவம் ஆடிக்காட்டிய அழகே
அருணனுதிக்கும் சீரலைவாய் அமர்ந்த அற்புதமே
தருணமிதுவே எந்தனை தவசீலன் ஆக்குவாயே
வரணுமிப்போ தெய்வானை வள்ளி யுடனேயே

ஊமைக்கு அருளிய உன்னத சக்தியே
தீமைக்கு எதிரியாய் திகழும் வடிவேலே
ஆமை போல் ஆய்ந்து அடங்கவே
வாளமை காக்கவா வரந்தா குமாரகுருபரா

சீரலைவாய் நின்றவனே சிங்கார வேலவனே
பாரலையேல் பாவியேன் பரிதவித்து போவேனே
நீரலைமேல் நின்றாடி நித்தமும் உனைபாடி
ஆரலைவார் அவர்தான் அடியார் முருகனுக்கே

பஞ்சலிங்க தரிசனம் பாவங்கள் போக்குமே
அஞ்சேல்என அபயம் அருள்வான் ஆறுமுகசாமி
நெஞ்சில்ஒம் சரவணபவ நின்றால் காணலாமே
வஞ்சமிலா அன்பரே வடிவேலன் அடியவரே

வைகாசி விசாகம் வாவென்று அழைத்தாயே
தைபூச ஜோதிக்கும் தண்ணருள் புரிந்தாயே
கைகாசி ல்லையென கலங்காது வைத்தாயே
பைசாச முமோடும் பன்னிருகை வேல்துணை

தாத்தா குமாரசாமி தலைவா செந்தூரா
பாத்தா பாவந்தீரும் புண்ணியம் கூடும்
ஆத்தா தந்தவேலும் அடியவரை காக்குமே
சாத்தா ஷண்ஙகுல சாமியும் நீதானே

அழகு பெட்டகமே அருள் கடலே
அழகு மயிலேறி அடியவனை காக்கவா
அழகு மணைவியர் அருகினில் இருப்பவரே
அழகு கடற்கரை அமைந்தது செந்தூரே

சிந்தை நிறைந்த சிவகுமரா முருகா
எந்தை வினைதீர எந்நிலை உயர்ந்திட
எந்தை யுந்தாயும் எப்போதும் போற்றிய
விந்தை யானவீரனே விரைகழல் சரணமே

சங்கரனை காத்த சண்முகா ஷட்கோணா
ஐங்கரனை மூத்தோனாய் ஐமுகனை தந்தையாய்
திங்களை ஞாயிறை திருவடியாய் கொண்டவனே
எங்களை காப்பாயே எட்டிரண்டு ஆனவனே

அலைபாயும் மனதுக்கு அமைதி செந்தூரிலே
அலைகடல் அருகினிலே அற்புத ஆலயமே
மலையெலா முன்கோயில் மணமெலாம் உள்கோவில்
சிலையெலா முந்தன் சிங்கார வடிவாமே

முருகன் முதல்வன் முதிர்ந்த மூலவன்
வருவன் வருந்தி வணங்கி வழுத்தவே
தருவன் தண்ணருள் தனிகை தம்பிரான்
இருவன் இணையடியால் இன்னல் இல்லாதாகுமே



முருகனை கண்டால் மயங்குதே மனம்
அருகினில் சென்றால் அகலவே மறுக்குதே
உருகியே போகிறேன் உன்னை பார்த்தாலே
பெருகியே வாழவே பேரின்பம் நாளுமே

தீர்த்தமாடி வந்தேனே தீவினை நீக்குவாயே
பார்த்துமாத் திரத்திலே பண்பனாய் மாற்றுவாயே
கார்த்திகை பாலனே கண்களிக்க வருவாயே
சீர்த்திகழ் செந்தூரில் சீரலைவாய் இருந்தாயே

நாழிக்கிணறு நீராடி நின்னடி பணிவேனே
வாழிஎன்று வாழ்த்து வல்லமை அருளே
பாழிலேமனம் போயிடாது பக்குவம் தருவாயே
ஆழியிலேயாடி வருகிறேன் ஆண்டருள் ஆறுமுகா

உருண்டு கொடுத்தேன் உன்பாதம் சரணானேன்
மருண்டு நிற்குமெனை மக்கள் போற்றவை
இருண்டு போனவாழ்வில் இனியாவது ஒளியூட்டு
உருண்டு நிற்குமென் உகார அகாரமே

வார்த்தை வரவில்லை வடிவேலனை கண்டாலே
பாரத்தை இறக்கினேன் பரிந்தருள் குமரேசா
ஆரத்தை சூட்டியே அழகு பார்த்தேன்
தாரத்தை மகவை தந்தநீ காப்பாயே

பாலால் அபிஷேகம் பாலமுருகன் அருள்தருமே
காலால் உலகளந்த கண்ணனின் மருமகனே
வேலால் சூரனை வதுந்தவள்ளி மணாளன்
நூலால் பாமாலைபல நூறுபாடி அருளினானே

பஞ்சாமிர்த அபிஷேகம் பார்வதி மைந்தனுக்கே
நெஞ்சார நினைந்தாலே நல்வாழ்வு கிட்டுமே
பஞ்சாப் பறந்திடுமே பாவவினை எல்லாமே
அஞ்சா நெஞ்சினனாய் அவனியில் ஆளலாமே

அபிஷேக பாலுண்டால் அல்லல் அகலுமே
அபிஷேக பழமுண்டால் அருள்நிலை கூடுமே
அபிஷேக ங்கண்டால் அவனியில் இன்பமே
அபிஷேக ஞ்செய்தால் அவனே அடியார்

பிரகாரம் சுற்றி பேருவகை கொண்டேன்
பரிகாரம் உன்னை பணிதலே வேறில்லை
அரிதாரம் பூசாநாடகம் ஆட்டுவிப்பவன் அவனே
இருதாரம் கொண்ட இணையிலா செந்திலானே

சிங்கார வேலவனே செந்தூர் வாழ்தேவே
மங்காத உன்புகழ் மாதவம் புரிவோர்
அங்கார நிலையும் அறிந்து பணிவரே
வங்ககரை ஓரத்தில் வளமான செந்தூராம்

எங்கும் எனக்கு ஏற்றம் தருவாயே
தாங்கும் கருணை தணிகை வேலவனே
ஓங்கும் புகழ் ஒளியும் அருள்வாயே
ஆங்கும் ஓரிடம் ஆர்வமாய் வேண்டுகிறேன்

சுந்தரமே சிவஜோதியே சுப்ரமண்யமே சரணமே
அந்தரமே நிற்கின்ற அடியேனை காப்பாயே
இந்தரமே ஆளவந்து இக்கணமே அருள்வாயே
தொந்தரவே என்றெனை தள்ளிடாதே துடிப்பேனே

நோன்பிருந்து வாடுமென் நோயினை நீக்குவாயே
பான்மறந்த குழவியென பரிதவிக்க விட்டிடாதே
ஊன்மறந்து போகுதே ஊர்த்துவ ரேதசருனே
யான்மறந்த போதிலும் யாசகம் அருள்வாயே

நாள்தான் கழியுதே நானுனை காணலையே
வேல்தான் தாங்கியே விரைந்துநீ வருவாயே
கால்தான் பற்றினேன் கருணைசெய மாட்டாயா
சூல்தான் ஒளிபெற சுப்ரமண்யா அருள்வாயே

விளையாடியது போதும் வினைதீர்க்கும் வேலவா
களை யானதை போக்கிட கண்திறந்து பாரையா
முளை யானது முதிர்ந்திட முருகா நீ அருள்தா
பிழையானதை பொறுப்பாய் பிள்ளையை காக்கவா

பார்க்கும் இடமெங்கும் பார்ப்பேன் உன்னையே
ஓர்க்கும் போதெலாம் ஓடிவந்து காப்பாயே
தீர்க்கும் வினையெலாம் தீனதயாளா உன்வேலே
ஈர்க்கும் உன் திருவடி ஈராறு கண்தானே

செம்பவள நிறத்தழகா செங்கமலக் கண்ணழகா
அம்பலம் நின்றாடும் அருந்தமிழ் கடவுளே
உம்பர் தொழும் உரைக்கொணா உயிரே
பம்பரமா ச்சுழலும் பாவியெனை காப்பாயே



பச்சை குடிபவனே பகமையாகுமா என்வாழ்வு
இச்சை வாட்டுதே இனியாகிலும் அருள்வாயே
பிச்சை கேட்கிறேன் பிதற்றுகிறேன் காப்பாயே
கச்சை கட்டாதே கதறுமெனை காக்கவா

இருமயில் கொண்டவனே இணையடி பணிந்தேனே
இருமயில் இருபுறமும் இருக்கயுன் காட்சிதா
இருமை துயர்தீர்த்து இகபர கந்தா
இருமாறி தியந்தா இரப்பிலா வாழ்வுதா

என்றும் நானுனை எண்ணியே இருக்கவே
நின்றும் கிடந்தும் நிர்விகல்பம் தாண்டியே
ஒன்றும் படியெனை ஒளியுடல் அருள்வாயே
அன்றும் நீயென் அருகிருக்க வேண்டுவனே

இரதவீதி வலம்வந்து இரட்சிக்கும் குமரா
இரதமாக நானுமென் இருதயத்தில் நீயுமே
இரதமோட்டி உபதேசித்ததை இன்னும்யான் தெளிவுறவே
இரதகொடி யானவனும் இங்குவந்து அருளுமே

சூரனை காத்தவனே சுப்ரமண்ய சுவாமியே
வீரனை போற்றிய வேலவா விரைந்துவா
பாரெனை வாழ்வேனோ பார்த்துன் நீயன்றோ
கூடெனை போடாதே கும்பிட்டேன் உன்னையே

மயிலேறி வருவோனே மணிகண்டன் சோதரனே
துயிலேறி போகாதே துதிக்கையான் இளவலே
கவியேறி கலந்துநில் கந்தவேளோ கடம்பனே
புலியேறி நின்றிடும் புகழுடல் அருள்வாயே

உன்னை பணிந்தேன் உன்னை காண்பேன்
என்னை யானறிவேன் எங்கும் இருப்பேன்
முன்னை வினைமாறும் முக்தியும் பெறுவேன்
அன்னை அருள்பெறுவேன் அப்பன் அடிபணிவேன்

எங்குமாய் விளங்கும் எந்தன் உயிரே
தங்குமாறு விரும்பினேன் தடுத்தாள் எம்மையே
பொங்குமாங் கடல்போல் பொன்னொளி அருளே
அங்குமாய் இருப்பேனே அடியேனுன் பிள்ளையே

சுயஞ்ஜோதி தந்தவனே சுப்ரமண்ய முருகமணியே
பரஞ்ஜோதி ஆனவனே பரிந்தருள் எமக்கே
அருள்ஜோதி நீதானே அடைக்கலம் உன்னடியே
சிவம்ஜோதி நான்பெறவே சிந்தையில் நில்லுமே

தங்கம் போல்தக தகக்கும் மேனியனே
சிங்கம் போலயான் சிறந்திட வேண்டுமே
பங்கம் வராது நீ பக்கத்தில் இருப்பாயே
உங்கம் பாயப்பா உறுதுணை ஆகிடவே

பாடினேன் உன்மகிமை பாடினேன் என்துயரே
சாடினேன் நீசர்களை சாவைநீக்க விரும்பியே
வாடினேன் துன்பதாலே வல்லமை தருவாயே
தேடினேன் சாயுச்சியமே நேர்த்தியாய் பெறவருளே

பக்குவம் தந்திடு பாலமுருகா அழகா
சட்டுவம் அறியுனே சட்டியில் உள்ளதை
குட்டுவம் போலவயிறு குணப்பெருங் குன்றமே
நட்டுவம் புரிபவனே நன்மைகள் தருவாயே

நீயேசரணம் நிர்மல நிதர்சன ஜோதியே
வாயேமுருகா வரந்தர வாமிகனே வள்ளலே
சாயேகொடுமை களையெடு சாமிநாதா கார்த்திகேயா
காயே மனம் கனிந்திட கருணைசெய் கந்தனே

தமிழக பொங்கும் தனிக்கோயில் கொண்டவனே
தமிழை காத்திட தணிகைவேலா எங்கும்
தமிழாள எதிலும் தமிழாகவே அருள்கவே
தமிழ் கடவுளே தாழ்பணிந்தேன் காப்பாயே

வள்ளலுக்கு அருளிய வடிவேலா முருகா
எள்ளலுக்கு ஆளாகாது எங்களை காப்பாயே
துள்ளலுக்கு பணியாது துவளாது அருள்வாயே
அள்ளலுக்கு நிதியந்தா அருட்பெருஞ் ஜோதியனே

முருகா என்றுன் முன்வந்து நின்றேனே
திருவா வினன்குடி தேவாயருள் தருவாயே
உருகா தாமனம் உன்மத்தம் பெறுவேனோ
அருவா யுருவாய் அனைத்திலும் இருப்போனே

திருப்பரங் குன்றமர்ந்த தெய்வானை கணவா
உருப்பெற வேண்டிடில் உனைபணிந்து பின்வேனே
கருப்பறை புகாதினி காத்திடுகந்தா கருணையாலே
அருகிருக்க வேண்டுமே அகத்தீசனே அருள்வாயே

பழமாய் முதிர்ந்திட பரமன் மகனே
உளமார பணிந்தேன் உய்விப்பாய் எம்மையே
குளமாய் பெருகிடும் கண்ணீரை மாற்றுவாயே
அழகாய் இருமாதர் அருகிருக்க அமர்ந்தாயே



உபதேசம் தருவாயே உள்ளொளி பெருக்குவாயே
உபதேசம் எனக்கவாமிநாதா உன்னடி பணிந்தேனே
உபவாசம் இருந்தேனே உன்னாமம் போற்றினேனே
உபதேசம் செய்தாயே உன்னை பெற்றவனுக்கே

தணிகை மீதமர்ந்த தணிகாசலா உனைநாடி
அணியணி யாகவரும் அடியார் நலம்பெறவே
பிணிபூப்பு நீக்கியே பிறவிப்பிணி போக்குவாயே
மணியாய் ஒளிர்பவனே மலைமீது அமர்ந்தவனே

நவபாஷாண உருவே நன்மலை பழநிமீதே
நவ நாத சித்தரும் நாடியுனை வருவரே
நவ துவார பொடுக்கவே நன்மொட்டை போட்டாயே
நவகிரக தோஷமும் நின்முன் நில்லாதே

வேல்வாங்கி நின்றவனே வேழமுகன் தம்பியே
சூல்வாங்கி போகாதினி சூரன்போல் இருந்திடவே
கோல்வாங்கி வள்ளியை கடிமணம் புரிந்தவனே
நூல்வாங்கி எனைகாத்து நீவாழவை செந்தூரிலே

பகைமை போகவே பகவாய் இருக்கவே
புகையும் மனமாறி புத்தியும் விவேகமாகி
தகைகொள் சன்மார்க்கர் தம்மொடும் கூடிவாழவே
சிகையினில் வெள்ளிருடிய சிவன்மகனை பணிவோமே

சிவனே மகனாய் சுப்ரமண்ய பாலனே
அவனே எங்குமான அருட்பெருஞ் ஜோதியனே
தவநே சர்களை தடுத்தாட்க் கொள்வானே
மவனே சுயஞ்ஜோதி மகிமையை உணர்வாயே

குறை நீக்கியே குடும்பம் காத்தவனே
நிறை வாக்கிய நிர்மல ஜோதியே
சிறை மீட்டவா சுப்ரமண்யா செந்திலா
திரை அகற்றியே தரிசனம் தருவாயே

பொங்கி ததும்புதே பொன்மேனி கண்டதுமே
அங்கி சார்த்திய அழகான முருகனே
தங்கி காப்பாயே தடுத்தாட்க் கொள்வாயே
எங்கி ருந்தாலுமே என்னுயிர் நீயன்றோ

பார்க்க பார்க்க பரவசமே பழனியப்பா
ஓர்க்க நிலைக்க ஒளிதந்து அருள்வாயே
சேர்க்க காக்க சேவடி பணிந்தேனே
யார்க்கு நிகரென யாவரும் போற்றவே

சந்தன மேனிகண்டு சண்முகா மகிழ்ந்தேனே
அந்தன ராகியாள் அத்வைத நிலைகூடவே
செந்தன வேமேனியாம் சொக்கன் மகனுக்கே
வந்தன ங்கோடியே வள்ளி மணாளனே

குருவாய் அமர்ந்த குகனே சுப்ரமண்யா
வருவாய் காப்பாய் வல்லமை தருவாயே
திருவாய் திறவாயோ திருச்செந் திலாண்டவா
கருவாய் புகாதெனை காத்து அருளே

வள்ளி கணவா வரமொன்று தாராயோ
அள்ளி கொடுபுன் அருளை முருகேசா
புள்ளி மயிலோனே புவிமீது நான்வாழவே
நுள்ளி பெறிவினை நல்லாக்கி வைப்பாயே

வாழவிடு வேதனையால் வாடுகிறேன் காப்பாயே
ஆளவிடு என்னையான் ஆறுமுகனே கந்தனே
ஆழவிடு தலத்திலே ஆண்டியாக ஆக்காதே
சூழவிடு சுற்றமே சுகமெலாம் பெற்றே

உலக மாயை உணரச் செய்யே
கலக மாற்றிடு கந்தா கடம்பா
பலக வைகற்றே பண்டித னாயிடவே
திலக மாகவிரு திருவடியிலே என்னுளே

விதிவழி போகுமோ வினாகி போவேனோ
கதிநீயே கண்மணியே கார்த்தி கைபாலனே
சதியார் புரிந்தாலும் சந்ததமும் காப்பாயே
மதிவழி சிறந்திட மன்னவா அருள்வாயே

எவ்வுலக மாயையும் என்முன் நில்லாதே
செவ்வேள் அடியனே செந்தூரான் பிள்ளையே
கவ்விடும் வினைகளை களைவாயே கடம்பனே
பவ்விய மாகவே பதமலர் சேர்ந்தேனே

செந்தில் வேலவா செங்கண் அருளவா
அந்திம காலம் அணுகாது காக்கவா
மந்திபா பொந்தன் மனதினை மாற்றவா
சந்திபா காலத்தில் சர்வமும் தரவேவா

உன்னையே நாடினேன் உன்னையே பாடினேன்
அன்னையே எந்தன் அப்பனே அபயந்தா
தன்னையே உணரும் தகுதியினை தந்தருளே
நின்னையே நம்பினேன் நிமலனே அருள்வாயே



பரஞ்ஜோதி ஆனவனே பரமான்ம பொருளே
சிரஞ்ஜோதி திகழவே சிறந்த செல்வமே
கரஞ்ஜோதி தந்தெனை கருணைமிகு ஆளாக்கே
பரஞ்ஜோதி உன்னாலே பாக்கியம் பெற்றேனே

தங்கமகன் சுயம்ஜோதி தந்தெனை மகிழ்வித்தாயே
பங்கமெதும் எங்களை பற்றிடாமல் காத்தருள்வாயே
தங்கமென மேனியுமனந் துளராத உறுதியுந்தா
சங்கமொடு சன்மார்க்கம் சார்ந்திடவே அருள்புரிவாயே

முருகா என்றுன்னை முகமலரப் பணிந்தாலே
உருகாத உள்ளமும் உன்னடி சேர்ந்திடுமே
பருகவே பக்தருக்கு பஞ்சாமிர்தம் தருவாயே
இருகண் ஒளியாகி இருப்பவனே இணையிலானே

நாடெல்லாம் உன்திருவிழா நாயகன் உன்னாலே
வீடெல்லாம் ஒளிவிளங்க வீதியெலாம் தமிழ்மணக்க
காடெல்லாம் நாடாகிட காருண்யம் தருவாயே
நாடெல்லாம் உன்மகிமை நான்பாட அருள்வாயே

எப்படிநான் இருந்தாலும் என்னுள்ளில் நீதுலங்குவாயே
அப்படிநான் செய்தவறை அன்டனே தடுத்தருளே
அப்படிமுடி காட்டிஎனை அகமகிழ்ந்தே இருக்கசெய்
இப்படிநான் என்றுமே இருந்திடவே அருள்வாயே

கடற்கரைவாசா கருணாமூர்த்தி கந்தாகடம்பா கருணைபுரி
உடற்பிணியோடு உளப்பிணியும் உன்னருளாலே ஓடச்செய்
திடமானமனமும் திறமானஉடலும் திருச்செந்திலாதிபா தந்தருளே
நடமாடுஜோதி நயனமிரண்டில் நாயகனுன்னால் காணனுமே

தனமும் கல்வியும் வேண்டுகிறேன் தந்தெனைகாத்து அருள்வாயே
தினமும் உன்னை தேடுகிறேன் இனமும் ஏனோ ஓடுகிறாய்
மனமும்உன்னை நாடுதே மகிமை காட்டவருவாயே
கனவும் காட்சியும் நீயானாய் கண்களில் உன்னை கண்டபின்னே

செந்தூர் முருகா சிந்தை கவர்ந்தவா
எந்தை உனது அருள் வேண்டியே
சிந்தை முழுதும் உந்தன் தோற்றமே
கந்தா கடம்பா கதிர் வேலவனே

செந்தூர் பதிவாழும் எந்தன் நாயகா
வந்து எமைகாத்து அருள் வேலவனே
முந்தை வினைபறுக்க விரைந்துவா மயூரனே
பந்தம் நீக்கிஎனை பண்படுத்து பகவானே

முருகா முருகா என்று நித்தநித்தம்
உருகா தவர்க்கு ஏது பக்திமுக்தி
இருகா தமுக்கு கண் வாய்மத்தி
உருதா ஒளிநா என வேண்டுகிறேன்

சிங்கார வேலவா சிரிக்கும் சுப்ரமண்யா
அங்கார வடிவா அற்புத பழனிமலையா
வங்கார னமோ வந்தது மனதினிலே
தங்காயிர ண்டால் தடுத்தெனை காப்பாயே

சண்முக கடவுளே சங்கடம் தீர்ப்பாயே
உண்முக சைவமணியே உதவிடு எந்தனுக்கே
எண்முக இருமுகமா எண்ணியே வாழ்ந்திடவே
கண்முக தெய்வமே கருணை புரிவாயே

ஆண்டவா செந்திலாதிபா ஆறுமுக வேலவா
ஆண்பிள்ளை நீயல்லவா ஆறுதல் தரவா
ஆண்டருள் புரிவாயே அறிவிலா எமையே
ஆண்டாயிர மிருக்கயருள் அறிவால் அறிந்தே

தாங்காது என்மனம் தாயானவா செந்திலா
ஏங்கியே தவிக்குது ஏறெடுத்து பாரய்யா
ஓங்கியே வளரனும் ஓம்சரவணபவ என்றதுமே
தாங்கியே காப்பாய் தாசனாக்கி வைப்பாயே

இறந்திறந்து வாழ்கிறேன் இருந்திட ஆசையிலை
பறந்திருந்து வாழ்ந்ததிலை பால்முருகா அறிவாயே
அருமருந்து அருள்தானே அடியனுக்கு தருவாயே
வரவிருந்து வாழ்ந்திருக்க வடிவேலா அருள்வாயே

ஆறுநாள் விரதம் ஆறுமுகன் திருவிழா
மாறுபடு சூரனை மயிலாக்கி சேவலாக்கி
ஆறுபடை அமர்ந்த ஆற்றுப்படை நாயகன்
ஏறுமயில் ஏறிவந்தே எங்களை காப்பாயே



கந்தன் கடம்பன் கார்த்திகேயன் கதிர்வேலன்
எந்தன் முன்னால் என்றும் இருப்பவனே
வந்தென் வினைநீக்கி வரங்கள் எல்லாம்
தந்தென் உளமகிழ தரணிபோற்ற அருள்வாயே

வடிவை பக்தர்க்கு பரமருளும் வடிவேலா
அடியை சேர்ந்தேன் அபயம் அருளாயோ
முடியை காணவே முருகாநீ முன்வருவாயே
படியை கடத்தினை பரிபூரணம் ஆக்குவாயே

சூரம்பாடு காணவே சுப்பிரமண்யா வந்தேனே
ஆரம்போட்டு அர்ச்சனை அன்பால் செய்தேனே
தாரமொடு மக்களுடன் தரணிபோற்ற வாழ்ந்திடவே
நாறுமிம் மூடனையே நல்லாக்கி தருவாயே

அரக்கனுக்கு அருளிய அளந்த அமுதே
அரைக்கணமும் அகலாது அருகிருந்து அருளே
அறக்கருணை அன்பருக்கு அளிக்கும் அன்பே
அறக்கடை அழித்து அறிதுயில் அருளே

முருகனின் தளபதியே முகமலர்ந்து அருள்பவரே
இருகரம் கூப்பினேன் இணையடி பணிந்தேனே
வருகனை வாழ்த்தியே வரம்பல தருவாயே
உருகவே அருளே உண்மை வடிவமே

செந்தில் ஆண்டவா செல்வம் தரவாவா
வந்தென் முன்னரே வரந்தனை அருள்வாய்
உந்தன் பக்தனென் உதவிக்கு ஓடிவா
தந்தேன் என்னையே தடுத்தாட் கொள்வாய்

குருவாய் அமர்ந்து குறைகளை நீக்குவாயே
திருவாய் மலர்ந்தே திகழும் ஜோதியே
உருவாய் வந்தே உபதேசம் தருவாயே
வருவாய் என்றுமே வல்வினை போக்கவே

குங்கும நிறத்தழகா குலதெய்வம் நீயன்றோ
அங்கும் நான்உன் அடிமையே அருள்வாயே
இங்கும் உன்னருளால் இனிதுவாழ செய்வாயே
பொங்கும் கடலருகே புவிகாக்க அமர்ந்தாயே

பாடினேன் பணிந்தேன் பரிதவித்தேன் பார்த்தருளே
ஊடினேன் ஓடினேன் ஊணமிலாது காத்தருளே
நாடினேன் உன்னையே நன்மையே தந்தருளே
ஆடினேன் பரவசமாய் ஆதரவாக இருந்தருளே

உந்தன் கருணையால் உலகில் வாழ்கிறேன்
எந்தன் குறைநீக்கி எங்குலம் காப்பாயே
சந்தன மணக்கும் சந்நிதி வந்தேனே
கந்தன் கடம்பன் கார்த்திகேயன் காப்பானே

அபிஷேகம் கண்டு ஆனந்தம் கொண்டோமே
உபதேசம் தந்தே உய்விக்க வேண்டுமே
பரதேசம் போயிட பக்கத்தில் இருந்திடவே
உபவாசம் இருந்தே உன்னருள் பெறுவேனே

கடற்கரை குமரா கண்கவர் அழகா
உடற்பிணி தீரவே உன்னடி வந்தேன்
படற்கொடி மகனும் மகிழ்வுடன் வாழவே
இடர்களை அருளே இன்முகம் காட்டே

உன்னை நினைக்கையிலே உள்ளம் உருகுதே
என்னை காத்தருள்வாய் எங்குல தெய்வமே
முன்னை வினைநீக்கியே முக்தியை அருள்வாயே
தன்னை தான்உணரும் தன்மையை தருவாயே

இருமாதர் புடைசூழ இணையடி காண்பேனே
இருகண் நின்றொளிர் இடும்பன் தலைவனே
இருவினை நீக்கியே இறுதிவரை காப்பாயே
இருமயில் கொண்டவா இணையிலா செந்திலாதிபா

சங்கரர்க் கருளியவா சரவணபவ குகா
சங்கரன் புதல்வா சந்நிதி வரவா
ஐங்கரன் சோதரா ஐயம் தீர்க்கவா
பங்கய முகவா பன்னிரு கண்ணவா

கடையில் கனிவாய் கண்மணி இருந்தாயே
நடையில் மேன்மை நான்பெற அருள்வாயே
இடையில் தளராது இறுதிவரை காப்பாயே
நடையில் ஞானம் தந்திடு எந்தனுக்கே

சரவணபவ ஓதியே சந்நிதிக்கு வந்தேனே
அரவணைத்து எம்மை அன்பனாய் மாற்றுவாயே
புறமெரித்தோன் புதல்வா புண்ணியம் அருள்வாயே
கரங்குவித்து நின்றேனே கருணைசெய் கந்தனே



தங்காபரணம் ஒளிர்ந்திட ங்கை இருவரோடு
பங்கயமுகம் காட்டியே பக்தனெனை காப்பாயே
அங்கமெலாம் புளகிப்ப அருந்தவக் காட்சிதனை
தங்கமயிலேறி வந்தருளி தளர்வினை நீக்குவாயே

முருகன் வருகிறான் முனிவனாக அருள்கிறான்
தருவன் தாளினை தடுத்தாட்க் கொள்கிறான்
ஒருவன் நானெனை ஒளிதந்து காக்கிறான்
அருவன் ரூபன் அருட்பெருஞ் ஜோதியனே

யாராவது அருள் புரியுங்களே எந்தன்
துயராவது நீங்கட்டுமே நாங்கள் வாழட்டுமே
மாறாதது வினைபயன் மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்
பாராது நீயிருந்தால் படுகுழியில் வீழ்வேனே
ஆறாது என்மனம் ஆறுமுகா அருளிடாயோ
மாறாது காதல் நீதானேயென் நாதனே
வாராது போனால் வாடிநான் போவேனோ
தீராத துயரெலாம் தீர்த்தருள் செந்திலாண்டவா

வாழ்க்கை என்னும் மாயையில் சிக்கி
வறுமையில் வாடுகிறேன் வடிவேலா காப்பாய்
வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்வாங்கு வாழவே
வந்தனை செய்கின்றேன் வந்தெமக்கு அருள்வாய்
வாழ்க்கை பிறரையும் வாழச் செய்யவே
வரமாக தந்தெமை ஆதரித்து இரட்சிப்பாய்
வாழ்க்கை பார்போற்ற பண்பாடு காத்து
வந்தவருக்கு பசிப்பிணி நீக்கி வாழ்வதே

பச்சைசார்த்தி பக்கத்தில் இருமாதர் புடைசூழ
பரமன் மகனே செந்திலாண்டவா நீயிருக்க
அச்சமெலாம் அரண்டோடி விட்டதே வேலாயுதா
அரவணைத்து எந்நாளும் காத்திடுவாயே
இச்சையெலாம் உன்மீது வைத்தேனே எங்குருநாதா
இருகண் மணியில் கலந்து இருப்பவனே
துச்சமென எனைநீ தள்ளிடாதே துவண்டிடுவேன்
துறவியர் போற்ற வாழ்வு தருவாயே

ஆறுமுகமான பொருள் நான்காண வேண்டுமைய்யா
ஆதிஅருணாசல மமர்ந்த பெருமானே
ஏறுமாமயி லேறியென் எதிர்வந்து நில்லுமே
எடுமல எடுத்துரைக்க அருள்வாயே
விறுஜோதி விரைந்து கண்டிடவே உந்தனது
விமலமுகம் காட்டி காப்பாயே
நாறுமுடலை மாற்றியே ஜோதியுடல் தருவாயே
நாளெலாம் பணிந்தேனே உன்பாதமே

என்ன கேட்பது உந்தன் முன்னின்று
எல்லாம் மறந்தது திருமுகம் கண்டதுமே
நின்ன தரும் அடிமை எம்மையும்
நிலையுற செய்வது திருவுளா சித்தமே
உன்ன தடிபணி புரிவதே கடனாம்
உதவிடு எந்நிலை கண்டு இரங்கியே
மன்ன னாகிட விருப்பிலை முருகா
மனிதனாக வாழ வைத்திடு என்னை

ஆணவத்தால் அறிவிழந்து இறுமாந்த என்னை
ஆறுமுகா அருள் கொடுத்து காப்பாயே
நாணுகிறேன் நாறுமென் வாழ்வை எண்ணி
நான்மறை வித்தகா குமரா அருள்வாயே
மாணவனாய் இருக்கவே தகுதியற்ற என்னை
மாணவர்களை சேர்க்க விதித்தது ஏன்தானோ
பாணபத்திரரை காக்க தந்தை வந்தாரே
பாவியேனை வாழ்விக்க தனயன் நீவாராயோ

**"செந்திலான் திருவடி அறிந்திடு வாயெனில்
சேர்த்திடும் பேரின் பமே"**

**ஓம் சரவணபவ**



# சன்மார்க்க தெய்வம்



**சுவாமியே சரணம் ஐயப்பா**

## சன்மார்க்க தெய்வம்

நம் இந்திய ஞான பூமியில் எண்ணிலடங்கா கோயில்கள் உள்ளன.

நாம, ரூப வித்தியாசமாய் பற்பல கோயில்கள் நிறைந்துள்ளது.

பக்தியால் ஞானத்தை காட்டிஞானத்தால் பரத்தை காட்டும் என்பது முதுமொழி.

பக்தியால் ஞானத்தை காட்டுவதில் முன்னிற்பது இன்று சபரிமலையிலே கோயில் கொண்டுள்ள ஜோதிஸ்வரூபன் தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பன்சுவாமியே.

சபரிமலைக்கு செல்ல கடுமையான விரதம் இருக்க வேண்டும். முதலில் மக்களை ஒழுக்கமாக்குகிறது இந்த விரத முறைகள்!

தூய பழக்க வழக்கம். எல்லோரையும் ஐயப்பனாகவே பாவிப்பது. எல்லோரும் ஒரே மாதிரி உடை, மாலை அணிவது எல்லோரும் சமம் ஆகிவிடுகிறார்கள்.

காலை மாலை இருவேளையும் புனித நீராடி கோயில் சென்றும் வீட்டிலும் இறைவனை பூஜை செய்து வழிபடுவது சுத்த சத்வ சைவ ஆகாரம் கொண்டு வாழ்வது விரத நாட்களில் பிரம்மச்சரியம் கடைபிடிப்பது. இப்படி மனிதனை மனிதனாக்கும் எல்லா நற்பண்புகளும் விரத நாட்களில் அனுஷ்டிக்கப்படுகிறது.

யாராக இருந்தாலும் நடந்துதான் போகவேண்டும் எளிமையாக வாழ வேண்டும். மலை ஏறித்தான் ஆகவேண்டும். தலையிலே இருமுடிப்பையை சுமந்துதான் ஆக வேண்டும். நெய் தேங்காய் கொண்டு போகணும்.

பண்பு - பணிவு - எளிமை - பக்தி - தொண்டு - அன்பு இந்த நாட்களிலே வந்துவிடும்

எப்போதும் இருக்க வேண்டும் இப்படி என வலியுறுத்தவே இந்த விரத முறை!

எல்லாமே ஞான - தத்துவ விளக்கம்!

18 படி ஏறி ஐயப்பன் என்ற ஒரே நினைவோடு வர வேண்டும். அப்போதுதான்காண முடியும்!

அங்கே காணப்போவது மகர ஜோதியை! எல்லாம் வல்ல இறைவனை ஜோதியாக காண நம்மை நாம் தயார் படுத்திக்கொள்வதே சபரிமலையாத்திரை.



அதற்கு நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதே விரதம்.

மனிதன் எப்படி வாழவேண்டும்? குருவை பணிந்து அவர் வழிகாட்டுதலில் இறைவனை காண பயணப்படவேண்டும். இதுவே சபரிமலை பயணத்தில் முக்கியமானது.

குருசாமியை சந்தித்து மாலை அணிந்து விரதம் காக்க வேண்டும். குரு வழிகாட்ட மலை ஏறி ஜோதி ஸ்வரூபனை காணலாம்!

சகலரையும் ஒன்றாக்கி பார்க்கிறது சபரி மலை! எல்லோரும் ஐயப்பனே!

இதுதானே சன்மார்க்கம்!?

சன்மார்க்கத்தை போதிக்கும் தெய்வமாக சபரிமலை தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்ப சுவாமி விளங்குகிறார்.

அந்த சன்மார்க்க தெய்வ புகழ்பாடி அடியேன் மகிழ்கிறேன்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

❖ ❖ ❖

**எல்லாம் வல்ல இறைவன் ஒருவரே!**
**நாம் எல்லோரும் அவர் பிள்ளைகளே!**
**இறைவன் ஜோதிஸ்வரூபன்!**
**சரியாக விரதம் இருந்துதான் போகணும்!**
**சிரமம் பாராது இறைவா என இருக்கணும்!**
**நல்ல ஆகாரம் நல் ஒழுக்கம் வேணும்!**
**எல்லோரையும் இறைவனாகவே கருதணும்!**
**எந்த பேதமும் யாரிடமும் பார்க்கக் கூடாது!**
**சன்மார்க்கமே சபரிகிரீசன் வழி!**
**வாழ்க சன்மார்க்க நெறி!**

❖ ❖ ❖

# மனிதனாகுக!?

உண்பதும், உறங்குவதும், இனவிருத்தி செய்வதும் மட்டும்தான் மனிதனின் வேலையா? மிருகங்களும் இதைத்தானே செய்கிறது!

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது! என ஔவையார் கூறியது எதற்காக? அறிய வேண்டாமா?

குறையின்றி நல்ல படியாக பிறந்த நாம் பிறவிப்பயனை அடைய வேண்டாமா பிறந்தது சாவதற்கா? வாழ்வதற்கா?

பிறந்து செத்து! பிறந்து செத்து! இப்படியே போனால் அறிவு - பகுத்தறிவு உள்ளவன் - மனிதன் என்று கூற முடியுமா?

மனிதன் என்பவன் யார்?

மனதை இதம் செய்ய - பக்குவப்படுத்த தெரிந்தவனே மனிதன்! அதற்குத்தான் பகுத்தறிவு!

எப்படி பக்குவபடுத்துவது?

இதை சொல்லித்தரும் குருவை தேடு!

நாம் சாகப்பிறக்கவில்லை!

வாழப்பிறந்திருக்கிறோம்!

எப்படி வாழ வேண்டும்?

பஞ்சமா பாதகங்கள் பொய் - கொலை - களவு - கள் - காமம் புரியாது நல்ல பழக்க வழக்கம் - ஒழுக்கத்துடன் வாழ வேண்டும்!

மீன் முட்டை இறைச்சி உணவுகளை உண்ணாதே! உடலை கெடுக்காதே?

மது, புகை முதலிய போதை பொருட்களை உபயோகிக்காதே! நோய்க்கு இடங்கொடேல்!

எல்லா உயிர்களிடமும் அன்பாயிரு!

எப்போதும் உண்மையே பேசு!

"ஒருவனுக்கு ஒருத்தி" என வாழு!

மண், பெண், பொருள் ஆசையை விடு!

**இறைவன் திருவடியில் சரண் புகு!?**

**அப்போதுதான் நீ மனிதனாவாய்!**



# சன்மார்க்க தெய்வம்

## சபரிமலை தர்ம சாஸ்தா

## ஸ்ரீ ஜோதிஸ்வரூபன் ஐயப்பன் துதிகள்

### காப்பு

#### அருள்மிகு ஸ்ரீ பால விநாயகர் துதி

| | | | |
|---|---|---|---|
| அபயம் | அருளும் | அறுகினை | அணிந்தவனே |
| உபயம் | உஆனை | உன்னால் | உறுதியாகவே |
| சமயம் | இதுவே | சடுதியில் | வருகவே |
| இமயம் | போலவே | இணையிலாது | வாழவே |

### அருள்

#### அருள்மிகு ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதி

| | | | |
|---|---|---|---|
| அழகம்மை | சுந்தரேசா | அரவணைத்து | காப்பாயே |
| பழகம்மா | அப்பா | பரிவுடன் | பாரப்பா |
| கழகம்மா | நிலத்தே | கருணையோடு | நடக்கவே |
| இளகவே | ஞுமே நீ | இருதயம் | இருப்பவனே |

### ஆசி

#### அருள்மிகு ஸ்ரீ ஆயர்தேவி துதி

| | | | |
|---|---|---|---|
| உன்னை | யறியவே | உள்ளிலே | வந்தாயோ |
| என்னை | யானறிய | என்னுயிர் | ஆனாயோ |
| சென்னை | குமரி | செகம் | எல்லாமே |
| அன்னை | உந்தன் | அருளை | பெறணுமே |

### அன்பு

#### அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி துதி

| | | | |
|---|---|---|---|
| ஓடி | யாகவே | ஒளிமய | ரூபமாகவே |
| சீரடி | காட்டியே | சீக்கிரமே | அருள்பவரே |
| பாடி | திருப்பள்ளி | பாதத்திலே | அனுமானை |
| யாடி | சிரஞ்சீவி | யானுனை | பணிந்தேனே |

## குருமாமுனி

### அருள்மிகு ஸ்ரீ அகஸ்திய மகரிஷி துதி

அருள் வேண்டி அலையும் எமக்கு
பொருள் உணர்த்தி பொற்கால வாழ்வும்
இருள் நீங்கியே இன்பம் பெறவே
மருள் போக்கும் மகரிஷியே போற்றி

## ஆதிகுரு

### அருள்மிகு ஸ்ரீ மகாவதார பாபாஜி துதி

என்றும் இருக்கும் எங்குரு பாபாஜியே
அன்றும் ஒளியாகி அன்பரை காத்தாயே
இன்றும் அருளினை இன்புறுடன் தருவாயே
நின்றும் புகழினை நான்பேச அருள்வாயே

## சற்குரு

### அருள்மிகு ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் துதி

உன்னையே கதியாக உன்னடியே சேர்ந்தேனே
பின்னையே ன்தான் பின்னையெனை
சோதிக்கிறாய்
தன்னையே இழந்தேன் தகுதியும் போனதே
அன்னையே அப்பா அருள்வாய் வள்ளலே

## மௌனகுரு

### அருள்மிகு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் துதி

தேட்டிலே அலையும் தேறாத என்னையே
நாட்டிலே வாழ்ந்திட நாநயம் பெற்றிட
தோட்டிலே அமர்ந்த தோன்றாத் துணையே
வீட்டிலே நிம்மதி வேண்டும் உன்னருளே

## சித்தர்

### அருள்மிகு ஸ்ரீ சித்தர் நடராஜ சுவாமிகள் துதி

இருக்கும் போது இனிக்க பேசினாயே
உருக்கும் வாழ்வில் உருக்குலைந் தழிகிறேனே
பருக்கும் வேதனையால் பரிதவிக் கின்றேனே
எருக்கும் சூடியவனே என்னை காப்பாயே



## வழிகாட்டி

### அருள்மிகு ஸ்ரீ இராமதாச பரமஹம்ஸர் துதி

நலம் பெறவே நல்லருள் புரிந்தவனே
பலம் கூடவே பண்பு உரைத்தாயே
கலம் சிறக்கவே கண்மணி தந்தாயே
மலம் நீக்கவே மன்றாடி பணிந்தேனே

## குரு

### அருள்மிகு ஸ்ரீ இராமசாமி தேசிகர் துதி

திருச்சி தாயுமான திருவருள் குருவே
அருச்சி க்கிறேன் அனுதினமும் உன்னையே
இருச்சி ன்னவாசல் இன்பம் தந்தவனே
திருச்சி ற்றம்பலமே திடந்தந்து காப்பாயே

## சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் துதிகள்

அகிலம் போற்றும் அற்புத அழகே
திகில்வினை நீக்கும் திருவருள் குமரா
பகைவினை எப்போதும் பார்த்திருக்க அருளே
அகலாது என்றுமே அடியேனுள் இருப்பாயே

ஆகாதது ஒன்றுண்டோ ஆரியங்கா வய்யனே
போகாதது இருக்குமோ போக்கிடுவாய் நீயல்லவா
சாகாதது தந்தவனே சாஸ்தா தெய்வமே
வேகாதது உணர்ந்தே வேதனைகள் நீங்கவே

இருமுடி கட்டியே இணையடி காணவே
குருவடி வாகியே குவலயம் காப்பவனே
திருவடி பணிந்தே திருக்கோவில் வந்தேனே
ஒருமுடி சேரவே ஒளியானவா அருள்வாயே

ஈடில்லா தெய்வமே ஈதிடுவாய் உன்னையே
வீடில்லா மல்போகுதே வேதனையை தீர்ப்பாயே
நாடில்லா விடினோ நானுயிர் துறப்பேனோ
கூடில்லா பேதையாள் கூத்தாடுவது எங்ஙனம்

உள்ளம் வேகுதே உண்மை உரைத்தேனே
கள்ளம் இல்லையே கண்கண்ட தெய்வமே
பள்ளம் மேடுதாண்டி பதினெட்டு படியேறி
வெள்ளம் போல்கருணை வெகுமதிபெற வந்தேனே

ஊனம் மனதிலே ஊரெலாம் துன்பமே
ஈனம் என்பிறவியோ ஈதிடுவாய் அருளையே
தானம் எனக்குத்தா தாழ்வில்லா வாழ்வை
கானம் பாடுவேன் காட்சி நீ தருவாயே

எங்கும் சரணகோஷமே எல்லையில்லா ஜோதியே
அங்கும் வந்தேனே அச்சங்கோ யிலரசே
இங்கும் வருவாயே இருவினை நீக்குவாயே
தங்கும் ஞானமே தபமோடு கேட்டேனே

ஏறியே மலைதனில் ஏகாந்தமா யிருப்பவனே
நாறியே போகுமுன் நானுனை உணரச்செய்
ஆறியே அறியாது ஆபத்தினை அகற்றிடே
மாறியே நான்வாழ மா நிதியம் தருவாயே

ஐயப்பா சுவாமியே ஐயம் தீர்ப்பாயே
மெய்யப்பா உன்னருள் மெத்தனமா யிருந்திட்டேன்
கையப்பா கொடப்பா கைகொடுப்பா ராருமில்லை
வையப்பா எந்தனையே வைத்தியம் புரிந்தே

ஒருமைப் பாட்டை ஒளியை தருபவனே
இருமை நீங்கிட இருமுடி சுமந்தேனே
கருமை மாற்றிட கடவுள் நீ வருவாயே
இருமை யானென்னுள் இன்பெலாந் தந்தே

ஓங்கார நாதனே ஓங்கியே ஒளிர்பவனே
ஆங்கார மடக்கியே ஆண்டிரு என்னையே
பாங்கார ம்பமாய் பரிந்தருள் நல்குவாயே
நீங்கார விகோடியே நீலிமலை இருப்பவனே

ஔஷதம் நீதானே ஔவியம் எமக்கே
சாஸ்வதம் உன்னருளே சாவில்லா மலாக்கு
கௌமாரா கருணைபுரி கேட்டினை மாற்றிடு
சம்சாரி எம்மை சாஸ்தாவே பார்த்தருள்

கல்லும் முள்ளும் கடுமலையும் தாண்டி
அல்லும் பகலும் அனுதினமும் பாடியே
வில்லும் அம்பும் வினைகளைய ஏந்தியவா
ஒல்லும் துயர் நீக்க ஓடோடி வந்தேனே



காந்தமலை ஜோதியே காப்பாய் எம்மையே
சபரிமலை வாசனே சன்மார்க்க தெய்வமே
நீலிமலை ஏற்றமே நீர்களை மாற்றுமே
அழுதாமலை சேர்க்கும் அரிஹர புத்திரனே

காண வேண்டுமே கருணை வெள்ளமே
பூண வருவாயே பூரணனே ஐயப்பா
நாண மில்லையே நானுன் அடிமையே
ஆண வம்போக்கி ஆதரி எம்மையே

கீர்த்தி அருள்வாய் கிருஷ்ண மணியே
சீர்த்தி கழ்மலைவாசா சிவனின் புதல்வா
மூர்த்தி யுன்போல் மூவுலகில் யாருண்டு
ஈர்த்தி டுவாயெனை ஈடேற்றந் தந்தே

கருடன் கூடவர கவசம் வந்திடுமே
புருடன் நீயன்றோ புலிமீது அமர்ந்தவனே
குருடன் என்னையே குணந்தந்து காப்பாயே
திருடன் பறிக்காது திரண்டதை பெருக்குவாயே

கைகாட்டி சின்முத்திரை கைகொள்ள சொல்பவனே
கால்கட்டி யோகமுத்திரை கடைபிடிக்க அருள்பவரே
கைகட்டி யுன்முன் கருணைவேண்டி வந்தேனே
கால்கட்டு போட்டவனே காப்பாய் சேர்ப்பாயே

கன்னி மூல கணபதி கருப்ப சாமியும்
சன்னி தானத்திலே சகபரி வாரமுமே
என்னி தயத்திலே எந்நாளும் ஐயப்பனே
உன்னி டத்திலே உருகி நின்றேனே

காவலாய் இருப்பவனே காருண்யம் மிக்கவனே
ஆவலாய் வந்தேனே ஆரண்ய வாசனே
ஏவலாய் என்னையும் ஏற்பாயே ஐயப்பா
தாவலாய் சபரிமலை தான்வர அருள்வாயே

சந்தனம் மணக்கும் சபரிமலை வாசனே
சந்தம் ஒலிக்கும் சரண கோஷமே
பந்தளம் காத்த பரிமள வாசமே
வந்தனம் சொன்னேன் வன்புலி வாகனனே

சபரிக்கு அருளிய சபரிமலை நாதன்
சபரிக்கு வந்தால் சஞ்சலம் தீர்ப்பான்
அபரிமித மாகவே அருளும் பெறலாமே
உபரியாக வேறீயே உன்னை உணரலாமே

சங்கடம் தீர்த்தே சர்வநல மருள்வான்
எங்கடம் ஒளியாக்கி எட்டிட வருவான்
பங்கய முகத்தோன் பக்தர்க்கு அருள்வோன்
தங்கமாக ஜொலிக்கும் தத்துவ சித்தன்

சாஸ்தா நாமம் சாந்தி தருமே
ஆஸ்தா னத்திலே அடியனை சேர்ப்பாயே
வாஸ்து ஒளியாகி வாசனை புரியவே
சாஸ்தா வரவேணும் சஞ்சலம் போகவேணும்

சத்தியமான தெய்வம் சபரிமலை ஐயப்பன்
நித்தியமான ஜோதி நிர்விகல்ப மருள்வோன்
பத்தியமாக வந்தால் பக்குவம் தருவான்
உத்தியதை உணர்த்தி உள்ளத்தில் இருப்பான்

சாதிமத பேதமில்லை சன்மார்க்க தெய்வம்
நாதியிலா மனிதர்க்கு நல்ல துணை ஐயப்பனே
ஓதிமுடி பாதவண்புகழ் ஓங்கார மானவன்
பாதி சிவ பாதிவிஷ்ணு பகவான் அவனே

சச்சிதா னந்தமே சபரிகிரி வாசனே
உச்சித மாகவே உயர்மலை இருப்பவனே
எச்சிதா னிவ்வுடல் எமையாள வருகவே
பிச்சிதா ன்நான் பிழைபொறுத் தாள்கவே

பம்பை பாலகனே பந்தள ராஜனே
அம்பை வேந்திய அருமறை வித்தகா
வம்பை வாங்கி விட்டேன் காப்பாயே
கொம்பை அகற்றினேன் கொடுமை களைவாயே

பல்லாண்டு வந்தேனே பரிவுடன் பாருமய்யா
வில்பூண்டு இருப்பவனே விரைந்து அருள்வாய்
மல்லாண்ட வன்தோளா மகிஷியை கொன்றவனே
நல்லாண்டு வந்தெனை நான்மகிழ செய்வாயே



பாடியும் ஆடியும் பதினெட்டு படியேறி
நாடியுனை வருபவரை நாடுபோற்ற செய்பவரே
வாடியுன் சந்நிதி வந்தயெனை காப்பாயே
ஆடியான் களிக்க ஆனந்தம் தருவாயே

பக்திபோடு விரதம் பண்போடு மண்டலம்
சக்திபோடு காத்தால் சிவஹரி அருள்வானே
யுக்திபோடு வாழவே யுணவன் நுணையாவான்
ஒத்திபோடு மேவினை ஒளியவன் தோன்றினாலே

பதினெட்டு படியேறி பக்தியுடன் வந்தேனே
பதினெட்டு புராணமும் பகர்வது ஒளிதானே
பதினெட்டு நாளிலே பரிவுடன் அருள்வாயே
பதினெட்டு வருடமாய் பாவிநான் வரணுமோ

பித்தாக செய்யாதே பிள்ளையென கொள்வாயே
மத்தாக மனதிருந்து மகரஜோதி காட்டுவாயே
அத்தாக போடுவான் அரவணைக்க வேண்டுகிறேன்
சொத்தாக உன்னையே சொந்தமாக கொள்வேனே

உத்தர நாளிலே உதித்த ஜோதியே
பத்திர மாகயெனை பக்குவமாக ஆண்டருள்
சத்திர மாமிரத்தில் சன்மார்க்க முரைக்கவே
புத்திர னாகயென்னுள் பிறந்தருள் பெருஞ்ஜோதி

குளத்து புழையாளா குவலயம் காப்பாயே
உளத்து றைபவனே உண்மை நீதானே
களத்து மேட்டிலும் கரிமலை ஏற்றத்திலும்
வளத்து டனுனை வந்தனை செய்தேனே

எருமேலி சாஸ்தாவே எங்குரு மணியே
திருமேனி கொண்டவனே திகழும் ஜோதியே
திருவேணி சங்கமத்தில் தீர்த்தமாட வருவேனே
ஒருவேலை யுணைபணிவதே ஒன்றிட அருளே

புலிமீது அமர்ந்து புலியினை காப்பவனே
ஒலிமீது ஒளிமீது ஒன்றொரு ளானவனே
கிலிவந்து வாட்டுதே கிள்ளியெறி ஐயப்பா
நலிவந்து துவளாமல் நல்லருள் புரிவாயே

புனித நீராடி பம்பையில் துதிபாடி
மனித கடலாடி மகரஜோதி கண்டாடி
இனித ன்றுடலாடி இறந்திடாது இருந்திடடி
கனித ந்தானடி கண்தூனடி அத்திருவடி

கார்த்திகை மார்கழி கடுவிரத விருந்தால்
சார்த்தி பாமாலையோடு சன்மார்க்க நெறிநின்றால்
ஆர்த்தெ முவாளையன் ஆலிங்கனம் செய்வான்
வார்த்தை போதாது வல்லமை அருள்வான்

கண்டத்திலே மணியோடு கண்டதால் மணிகண்டன்
அண்டத்திலே அவன்போல் அருள்பவன் இல்லையே
பிண்டத்திலே கண்மணி பிறவிவினை போக்குவான்
பண்டத்தில் ஒளியாம் பக்குவமாய் காப்பாயே

அச்சங் கோயிலரசே அரவணை பிரசாதந்தா
அச்சம் நீக்கியே அப்பமே தருவாயே
இச்சை போக்கியே இகபர சுகமருளே
பச்சை நான்கான பகவானே சரணமய்யா

அன்ன தானபிரபுவே அய்யப்ப சாமியே
இன்ன வினைபோக்கி இணையடி சேர்ப்பாயே
உன்ன தரும்புகழை உலகோர் பாடவே
பன்ன வழுந்தா பாலபிஷேக பிரியனே

ஆழிசூழ் உலகுகாக்க அவதாரம் எடுத்தவனே
ஆழிமழை கண்ணனன் அருந்தவப் புதல்வனே
ஆழிகண்டு படியேறி ஆதரவு வேண்டியே
ஆழிவென் உள்ளமாக அமரவே நாடினேன்

ஆறுமலை ஏறிவந்தே ஆண்டவனை கண்டே
ஆறுதலை பெறுவார் ஆயிரங் கோடியே
ஆராதா முணர்ந்து ஆடுவார் போற்றியே
ஆராதன் புமாறுமே ஆதிஜோதி ஐயப்பனாலே

நெய்யால் அபிஷேகம் நெடுமால் புதல்வனுக்கே
மெய்யால் நன்மையே மெய்யன்பர் ஆனாலே
கையால் அன்னதானம் கருணையோடு செய்தால்
உய்யலாம் வாழலாம் உண்மை உரைத்தேனே



எத்தனை அபிஷேகம் எங்கள் ஐயப்பனுக்கே
அத்தனை யம்ஏற்றே அருள்மழை பொழிவான்
சித்தனை தத்துவனை சின்மயம் காட்டுபவனை
இத்தனை போற்றியும் இனிக்குதே என்மனம்

கற்பூர ஜோதியும் காந்தமலை ஜோதியும்
சிற்பர ஜோதியும் சிவமகன் தோற்றமே
அற்புத வாழ்வை அய்யப்பன் தருவானே
பொற்புர மருள்வான் பொன்னம்பல முறைவோன்

தேங்காயிலே நெய்யாம் தேவாதி தேவனுக்கே
தேங்காது பொய்யாம் தேடியே வருபவனுக்கே
பாங்காக அருள்வானே பாவிகளை தவிர்ப்பானே
வேங்கை புலிமீது வேழமுக சோதரனே

ஒவ்வொரு படியாக ஒருமை மனதோடு
ஒவ்வொரு ஆண்டுமே ஒளியை கண்டால்
ஒவ்வொரு நிலைதாண்டி ஒண்பொருள் சேரலாமே
ஒவ்வொரு மனிதனும் ஒளியய மாகலாமே

பரிவார தேவதைகள் பரிவுடன் சூழ்ந்திருக்க
அரிஹர புத்திரனே அபயம் தருவானே
சரிவர பூஜித்தாலே சர்வவினை மாற்றுவான்
கிரிவர அருள்வான் கிருபை நமக்கே

பூர்ணா புஷ்கலா பூதநாதன் அருகிருக்க
பூர்ணா குதியான் பூபாலனுக்கு தருவேனே
பூர்ண பாக்கியே பூமியில் வாழவை
பூரண நல்வாசி பூமொட்டு காய்கனியே

மாமலை சபரியிலே மணிகண்டன் கோயில்
பாமலை சாற்றியே பார்க்கவே வந்தேன்
பூமாலை வாங்கிட பூமணியே அருள்வாயே
வாமலை இறங்கியே வாடிய என்முனே

சுவாமியே ஐயப்பா சுந்தரா மணிகண்டா
சுவாமியே சாஸ்தாவே சுபமெலா மருள்பவனே
சுவாமியே ஜோதியே சுகானுபூதி தருபவனே
சுவாமியே சரணமே சுத்தனாய் ஆக்குவாயே

கலியுலக தெய்வமே கற்பகமே கண்மணியே
புவிமீது வருவாயே புகழுடனே தருவாயே
பழியாக வந்தேனே பழவினை தீர்ப்பாயே
ஒளியாக ஒளியாக ஒருவழி சேர்ப்பாயே

பொன்னு பதினெட்டு படியேறி வருவேனே
அன்ன மதுபோல அறிவுடன் துலங்கவே
மின்ன மௌன ஒளி மிகுகருணை புரிவாயே
உன்ன தமான உன்திருவடி பணிந்தேனே

பக்தியால் எட்டும் பதினெட்டு படிவாசா
சக்தியிலை தருவாயே சரண் உனக்கே
முக்தி தான் வேண்டியே முகமன் தந்தேனே
அத்தியான முணர்த்தி அகக்கண் திறப்பாயே

காலை எழுந்து கனிவோடு துதித்து
மாலை எடுத்து மணிதனில் ஒற்றியே
பாலை கொடுத்து பக்தியோடு பணிந்து
மாலை வேளையும் மணிகண்டனை காண்பாயே

இருமுறை குளித்து இருமாதம் விரதமாய்
இருமுடி சுமந்தால் இருவினை நீங்குமே
இருமாத ருடனீ இருப்பது என்னவோ
இருபாத நோகாது இருப்பாய் என்னோடே

இருப்பது விந்தையே இருகால் கட்டியே
இருந்தது சபரிமலையே இணையிலா பேரொளியே
இருக்கிறது காப்பாயே இன்பெலா மருள்வாயே
இருக்கின்ற வினைமாற்றி இணையடி சேர்ப்பாயே

பொன்னான உருவமே பொற்சபை அப்பனே
பொன்னான பதினெட்டு படிமீது அமர்ந்தவனே
பொன்னான உடலாக பொருள்தர வேண்டுமே
பொன்னான புவியாள போற்றினேன் உன்னையே

பம்ப குளத்தருகே பனிமலை காட்டிலே
துஷ்ட விலங்குமீது துணிந்து அமர்ந்தவா
இஷ்ட தெய்வமே இருமுடி சுமந்தேன்
கஷ்ட நீக்கியே காப்பாய் எந்நாளுமே



மாளிகை புறமம்மா மஞ்சமா தேவியே
காளியோ காப்பாயே கதறிடும் எம்மையே
ஆழியோ டருகில் ஆர்பரிக்குந் தேவர்களே
வாழியே என்றுமை வாழ்த்துவீர் பணிந்தேனே

வாழ்ந்திட வேணுமோ வன்புலி வாகனனே
தாழ்ந்திட விடாதே தன்மானம் காப்பாயே
ஆழ்ந்திட அருளில் அடியேன் விரும்பினேன்
சூழ்ந்திட சன்மார்க்கர் சகமெலாம் பெற்றே

சன்மார்க்க தெய்வமே சவலை பிள்ளையான்
சன்மார்க்க குருவாலே சத்தியம் உணர்ந்தேன்
நன்மார்க்க மிதுவெனவே நல்லோர் போற்றவே
புன்மார்க்க மழிக்கவே புவிமீது வருகவே

வந்து நீ அருள வந்தனம் சொன்னேன்
தந்து நீ ஞானம் தரணியில் பாவலே
பந்து நீ பல்லவோ பகவானே ஐயப்பா
முந்து நீ என்விதி முடியும் முன்னே

முன்னே செய்பாவ முடிச்சை மாற்றே
பின்னே வருவினை பிடித்து எரியே
இந்நே ரமுனையே இருதயத்தில் வைத்தேன்
எந்நே ரமுமிரு என்னுள்ள கமலத்திலே

கமலத் திருவடி கண்டால் மேன்மையே
மும்மல மாற்றியே முக்தியை தேடுவாயே
அம்மல மகற்ற அய்யப்பன் துணையாமே
அமலன் அவனே அன்பினால் ஆள்பவனே

கன்னி ஐயப்பனை கண்டு மகிழ்பவனே
கன்னி வருமெனை கருணையால் காப்பாயே
கன்னி மூலகணபதி கருத்தசாமி கடுத்தசாமி
கன்னி மாளிகைபுரமே கனிவோடு அருள்வாயே

நாகர்சூழ இருப்பவனே நான்மாட கோயிலிலே
நாகர்கோவில் இருந்துயான் நாடியே வந்தேனே
நாகர்கேது திசையிலே நலமது பெறுவேனோ
நாகராஜா தெய்வமே நம்பினேன் காப்பாயே

பாட்டை எழுதியே பாடவும் வைத்தாயே
கூட்டை பற்றியே கூத்தாடு கின்றாயே
ஏட்டை ஊறிய ஏற்றும் தருவாயே
காட்டை வேண்டேன் கருணையே அருள்வாயே

காடுமலை தாண்டியே கரிமலை ஏறியே
நாடுமலை சபரிமலை நான்காண வந்தேனே
வாடுமன வாட்டமாற்றி வன்புலி வாகனா
ஆடுமன குரங்ககற்றி ஆதரி எம்மையே

கேட்டது அருளும் கேரளத்து சபரிமலையா
பாட்டது பாடியே பாவியான் புலம்புகிறேன்
போட்டது முளைக்கிறது போதனை போதுமே
பீட்டது விளைமாற்றி மீண்டுமெனை வாழவை

தோன்றும் மகரமினை தேடியே வந்தேனே
யாண்டும் உன்மகிமை யாண்டாட அருள்வாயே
வேண்டும் வரந்தந்து வேதனை மாற்றுவாயே
மீண்டும் பிறவாது மீண்டிட வழிகாட்டு

மகர சங்கராந்தி மகரஜோதி காட்சியே
ஆகர நிலைப்பதியே அய்யப்ப கனாபியே
பகர என் நிலைமை பாவிக்கு அருள்வாயே
உகர வழியான் உய்ந்திட செய்வாயே

அறியாமல் செய்தது அதிகம் ஆகுமோ
அறிந்தே புரிந்தது அவசியம் என்பேனா
அறிந்தும் அறியாமலும் அடியேன் செய்பிழை
அறிவே வடிவானவா அழித்து அருள்வாயே

தினம் உன்முன் திருவருள் வேண்டியே
மனம் பேதலித்து மருண்டு நிற்கிறேனே
இனம் போற்ற இன்ப வாழ்வருளே
கனம் மடியில்லை கருணைபுரி ஐயப்பா

விரதம் இருக்க வைத்தது ஏனப்பா
பாரத கண்டத்தை பண்படச் செய்யவோ
பாரதம் உணர்ந்த பாரத நாடல்லவா
குரோதம் மாற்றி கும்பிடச் செய்வாயே



இப்படி கதறுகிறேனே இனியும் தாமதமேன்
அப்படி நானென்ன அடாதது செய்தேன்
தப்படி என்றெனை தடுக்காதது ஏனப்பா
முப்படி ஆறுதாண்டி முறுவலிக்கும் ஐயப்பா

போகம் புரிந்திட போக்கியதை யில்லையே
போகம் ஒன்றே பேடியென் மனதிலே
தாகம் இருக்கிறது தடுத்தாள் ஐயப்பா
வேகம் மாற்றி விவேகம் தருவாயே

கூப்பிடு காட்சிதா குறைகளை அருள்தா
மாப்பிடு எனக்கே மகிமை தரவா
ஆப்பிடு அடங்காது ஆட்டம் போட்டால்
காப்பிடு கவர்ண காயமும் தந்தே

உற்றார் இல்லையே உறவும் தொல்லையே
பெற்றார் விட்டனரே பெண்ணாக பிறக்கலையே
மற்றார் உதவுவர் மணிகண்ட பெருமானே
கற்றார் ஒருசிலர் கடவுளென வந்தனரே

பிச்சை காரனாக்கி பிதற்ற வைத்தாயே
இச்சை கொண்டு இன்புற்றது குற்றமா
அச்சை பிடுங்கு அடியேன் வீழவே
மச்சை யினுள்ளே மணிகண்டா நீதானே

அழுதால் பெறலாம் அருளை என்றாரே
அழுவலி யில்லாயான் ஆண் பிள்ளையன்றோ
தொழுதால் போறாதோ தொண்டும் புரிந்தேனே
பழுதால் இந்நிலையோ பரிந்தருள் ஐயப்பா

புலம்ப வைத்தவனே புகலிடம் தந்தருள்
அலம்ப செய்தேன் அரவணைக்க தாமதமேன்
கலங்க விடாதே கண்ணீர் இல்லையே
மலங்க விழிக்கும் மகனை காத்தருள்

போதுமுன் விளையாட்டு போக்கற்று போனேன்
யாதுமுன் அருளானால் யானென்ன செய்தது
சூதுமுன் நிற்கின்றதே சூழ்ந்திடாது காப்பாயே
மாதுமுன் தலைகுனிய மணிகண்டா விடாதே

புலி நீ அனுப்ப புலையனான் வருவேன்
கிலியிலை கேட்டிட கடவுள் நீ என்னுள்ளே
வலியிலை என்றால் வாம்தா உடனேயே
ஒலி நீ ஐயப்பா ஒளியும் நீ ஜோதியே

தாமதம் செய்யாதே தயவுடன் பணிந்தேன்
மாமதம் கொண்டாலும் மனிதனாய் மாற்றிடு
போமதம் என்றுயான் போக்கிட நிலையருளே
தாமதம் எனையுணர தலைவனுனை பணியவே

நெருங்கி விட்டேன் நெருட வைக்காதே
சுருங்கி விடாமலே சுதந்திர மாயிருக்கவே
அருங்கி ருஷ்ணமணியே அருள் மழையே
வருங்கி ன்னரரும் வாழ்த்திட செய்வாயே

சதம் நீ என்றே சபரிமலை வந்தேனே
பதம் நீ பார்க்க பக்குவ முன்னருளே
இதம் நீ யல்லவா இன்னருள் தருவாயே
சதம் நீ என்னோடு சத்சித் ஆனந்தமே

ஒன்றான பின்பு ஒளியுடல் தானே
மன்றான பொற்சபை மணிகண்டா துணைநீயே
கன்றான என்னையே கருணையோடு சேர்ப்பாயே
குன்றான சபரிக்கு குருவான தெய்வமே

இரண்டு கண்ணான இருமுடிப் பிரியனே
இரண்டு வினைபோக்க இணையடி சேர்ந்தேனே
இரண்டு காலமும் இன்பமே என்றுமே
இரண்டு இல்லையே இனிநாம் ஒன்றே

மூன்று குற்றம் முதிர்ந்தால் இல்லையே
சான்று இதற்கு சன்மார்க்கர் கோடியே
ஆன்று அவிந்து அடங்கியோர் துணையே
மூன்று உலகும் முனியென போற்றுமே

நால்வேத சாத்திரம் நவில்வதும் ஜோதியே
நால்யோக நெறிநின்று நன்மார்க்க முணர்வீர்
பால் போல குணமாக பண்புடனே அன்புடனே
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வாழ்வீர்



ஐம்பூத ஒடுக்கம் ஐயாபுன் கண்ணிலே
ஐம்பூத மயமே ஐயநிலை உலகமே
ஐம்பூத நாதனே ஐயப்ப சுவாமியே
ஐம்பூத முடிவில் ஐக்கியம் ஜோதியிலே

ஆறாம் பம்பை அழுதா நீராடி
ஆறாம் நிலையேறி அற்புத நிலைகூடி
ஆறாம் மனமாற்றி ஆனந்த மாகவே
ஆறாம் கோணத்திலே அறிந்தே இருப்பாயே

ஏழேழு பிறவிக்கும் ஏற்றம் தருபவனே
நாளேது பொழுதேது நம்ஐயப் பனுக்கே
பாழேது அவன்முன் பணிந்தவர் உய்வரே
சூழேழு ரிஷிகளும் சுகம்தர வருவரே

எட்டும் மணியே எருமேலி ஐயப்பா
தட்டும் மணிகதவை தருவான் அமுதை
கட்டும் ஆசையை கருணை புரிவானே
ஒட்டும் உறவுநிலை ஒளிக் கண்ணே

சுபம்




## ஐயப்பா நேரில் வருவாயே!

| | | | |
|---|---|---|---|
| வா | வா | ஐயப்பா | |
| வன்புலி | வாகனா | மணிகண்டா | |
| வா | வா | மணிகண்டா | |
| மகர | ஜோதியே | ஐயப்பா | - வா வா |
| வருந்தி | அழைத்தேன் | வருவாயே | |
| வறுமை | எல்லாம் | தீர்ப்பாயே | (வா வா) |
| வரந்தர | நேரில் | வருவாயே | |
| வாட்டம் | நீக்கும் | ஐயப்பா | - வா வா |
| வன்புலி | மேலே | வரவேணும் | |
| வாவா | என்றே | கூப்பிடணும் | - (வா வா) |
| தாதா | என்றேன் | அருளையே | |
| தருவாய் | நீயும் | உடனேயே | - வா வா |
| எல்லோரும் | பார்க்க | காட்சியே | |
| என்முன் | நீயே | தருவாயே | (வா வா) |
| ஏழைக்கு | இரங்கும் | ஐயப்பா | |
| ஏற்றிடு | படிபோல் | என்னையே | - வா வா |
| மாற்றிடு | மகிமை | தந்திடு | |
| மரணம் | இல்லாம | லாக்கிடு | (வா வா) |
| போற்றுவேன் | என்றும் | உன்னையே | |
| போற்றி | போற்றி | ஐயப்பா | - வா வா |
| சபரிமலைக்கு | நான் | வரவேணும் | |
| சாஸ்தா | புனைநான் | காணவேணும் | (வா வா) |
| பதினெட்டு | படியேறி | வரவேணும் | |
| பக்கத்தில் | என்றுமுன் | துணைவேணும் | - வாவா |
| சுவாமியே | சரணம் | ஐயப்பா | |
| சந்ததம் | நீயே | துணையப்பா | - (வா வா) |
| அரிஹர | சுதனே | ஐயப்பா | |
| அன்புடன் | அழைத்தேன் | நெய்யப்பா | - வா வா |
| ஆனந்த | கூத்தும் | ஆடிடவே | |
| அற்புத | காட்சி நீ | தருவாயே | (வா வா) |
| சன்மார்க்க | ஜோதியே | ஐயப்பா | |
| சர்வமும் | நீயே | மெய்யப்பா | - வா வா |



## சற்குரு கோவிந்த சுவாமிகள்



## கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

## சற்குரு கோவிந்த சுவாமிகள்

மரணமிலா பெருவாழ்வு பெற்ற ஞானிகள், சித்தர்கள் நம் நாட்டில் ஏராளம்!

ஒப்பற்ற இறைவனை உணர்ந்து ஒளி உடல் பெற்ற மகான்கள் ஏராளம்!

இந்தியாவின் பெருமையே இதுதான்!

இந்த ஆன்மீக பூமியில் பிறந்த நாம் மிகவும் புண்ணியசாலிகள்! இறையருள் பெற்றவர்கள்!

அடியேன் பூவுடல் எடுத்த 24 ஆண்டில் திருவடியை சரணடையும் பேறுபெற்றேன்.

எந்தன் வாழ்விலும் அருள்கூட்டிய ஞானிகள் பலர்! வழிகாட்டியோர் பலர்!

"உலகே மாயம் வாழ்வே மாயம்" என எனக்கு உணர்த்தி என்னை நெறிப்படுத்திய மாகுரு சித்தர் பெருமகனார்தான் கோவிந்த சுவாமிகள்!

கன்னியாகுமரிக்கு என்னை அழைத்தது வாலை கன்னியாகுமரி அம்பாள் அருள் பெறச் செய்தது, கன்னியாகுமரியிலே இருக்கச் செய்தது, குருபீடத்தில் அமர்த்தியது எல்லாம் வல்லவரான சற்குரு கோவிந்த சுவாமிகளே! அவரின் ஒப்பற்ற அருளாசியே!

பல ஞானிகள் இன்றும் கூடவே இருந்து எம்மை வழிநடத்துகிறார்கள்!

கோவிந்த சுவாமிகள் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலிலே காட்சி தந்து கருணை புரிந்து வழிகாட்டியதால்தான் அடியேன் இன்று குருஸ்தானத்தில் இருந்து வழிகாட்ட முடிகிறது. வள்ளல் பெருமான் கூடவே இருந்து நடத்துகிறார்!

சூட்சும நிலையில் இருந்து ஆன்மீக ஞானத்தை உலக மக்களுக்கு உணர்த்தி வருவது ஒன்றே அவர்தம் ஒப்பற்றப் பணி!

இன்னார் என்று அறிவிக்காமலேயே எனக்கு வழிகாட்டிய தெய்வம் சற்குரு. தேடுகிறேன்! காட்சி தருவாயா? சற்குருவே! எங்கும் இருப்பார்! யாருக்கும் அருள்வார்! அவர்தம் புகழ் பாடுவதே எமக்கு மகிழ்ச்சி.

✤ ✤ ✤ ✤ ✤



# சற்குரு கோவிந்த சுவாமிகள்

### காப்பு

பரசுராம பிள்ளையார் பகவதி அருகினிலே
அரசுபுரி எம்மையே அடியேன் நிலைபெறவே
முரசுகொட் டுலகிலே முதிர்ஞானி கோவிந்தனே
சரசுவதி வினாயகா சதகம் பாடஅருளே

### குமரி அன்னை துதி

குமரியாம் அன்னையாம் குமரிமுனை இருப்பவளே
உபரியாக ஞானமே உலகிலே விளங்கிடவே
அபரித மாகஅருள் அடியேன் பணிபுரியவே
கௌரி கௌ மாரிபகவதி கண்மணியே அருளே

### சித்தர்கள் துதி

சித்தம் தெளிந்த சன்மார்க்க பெரியோர்களே
நித்தம் போற்றும் நின்மக்கள் வாழ்ந்திடவே
புத்தம் புதுசதகம் பாடஅருள் சித்தர்களே
தத்தம் நிலையுணர தக்கபடியே அருள்கவே

### அந்தாதி சதகம்

அன்பான நிலையாகி அமைதியே உருவாகி
இன்பான மோனிலை இவ்வுலகில் தானடைய
துன்பான இருவினை தூரத்தள்ளி கோவிந்தா
உன்பாத கமலந்தா ஊர்த்துவம் தான்கூடவே

கூடவே முச்சுடர் கூடவே இருப்பாயே
நாடவே நன்மார்க்கம் நவில்வாய் எமக்கே
ஓடவே துன்மார்க்கம் ஓங்கார மயமானவனே
பாடவே பட்டுமன்றி பக்குவமும் தானருளே

அருளே உன்செயல் அறிவேன் யானுமே
பொருளே வேண்டினேன் பொன்னான உடலோனே
இருளே அண்டாது இனியென்றும் ஒளியாகவே
மருளே வராதெனை மனிதனாய் மாற்றுவாயே

மாற்றுவாய் உலகினை மக்கள் நலம்பெறவே
போற்றுவார் எல்லாம் புகழுடல் பெற்றிடவே
சாற்றுவாய் நீதிதனை சன்மார்க்கம் நிலைக்கவே
ஏற்றுவார் என்றும் ஏகாந்தம் இருப்பரே

இருப்பரே மெய்யுனே இருளகற்றி இன்றுற்றே
கருப்பெற கண்ணினை கண்டுணர் உபதேசிக்க
இருப்பாரே கோவிந்தசாமி இணையடி பணிவாயே
கருப்பாறை பகவதி கண்ணின் ஒளியே

ஒளியே மிகுந்த ஒப்பிலா கோவிந்தா
நளியே போதும் நாடிடும் எனைக்கா
துளியே ஆயினும் துன்பம் தாளாதே
அளியே உடனே அருளை எமக்கே

எமக்கே துன்பெலாமோ ஏற்றருள கூடாதா
உமக்கே இது தருமோ உன்னடி சரணமே
ஏமக்கே என்றெனை ஏளனம் புரியாதே
ஆறுமக்கே அடிமை ஆற்றுவாய் கோவிந்தா

கோவிந்தா என்றுனை கோடிதரம் அழைத்தேனே
பாவியிந்த மகனின் பரிதவிப்பை போக்குவாயே
ஆவியிந்த உடல்மாறி அலைந்திட வைத்திடாதே
நாவிந்த சன்மார்க்கம் நிலைபெற பாடணுமே

பாடணுமே கோவிந்தன் புகழ்தனை உலகறியவே
ஆடணுமே எனைமறந்து ஆண்டவனை உணர்ந்தே
கூடணுமே பரத்தோடு கூவியழைக் கின்றேனே
ஊடணுமே உன்மத்தம் உன்னால் தான்பெறவே

பெறவே சத்சங்கம் பெம்மான் உன்னோடே
அறவே நீக்குவாய் அடியனின் இன்னலையே
உறவே சாதுக்கள் உடனேயே வேண்டுவனே
மறவே னுன்நாமம் மாமனிதா சித்தனே

சித்தனே பாவியெனை சிவனாக்கி அருள்கவே
அத்தனே யானுன் அடிமை யன்றோ
முத்தனே உன்னாலே முன்னாலே ஆளானேனே
பித்தனே நாளிதுவரை பிதற்றியது அறியாமலே



அறியாமலே இருந்தவனை ஆட்கொண்ட அண்ணலே
தெரியாமலே கண்காணித்த தெய்வமே கோவிந்தா
புரியாமலே போயிடாது புண்ணியம் உணரவே
குறியாமலே வந்துடனே குடும்பம் காப்பாயே

காப்பாயே கண்ணின் கருமணியே கண்ணாளா
பார்ப்பாயே இருவினை பாவியேனை விட்டோடவே
சேர்ப்பாயே திருவடி சேயெனை ஆட்க்கொண்டே
பூப்பாயே புண்ணியனே பூரணனே ஆனந்தமே

ஆனந்தம் வேண்டுமே ஆனந்த ஆதீதனே
நானந்த நிலைபெறவே நற்கருணை புரியுமே
ஊனந்த உணர்வுறு உள்ளொளி காணவே
தானந்த மானவனே தகுதியை தருவாயே

தருவாயே தகுதியை தவராஜ சிங்கமே
வருவாயே எதிரிலே வல்லமை மிக்கோனே
உருவாயே ஒளிரவே உன்கருணை வேண்டுமே
இருவாயே இணையடி இருப்பாயே இயல்பாய்

இயல்பாய் இருக்கவே இகபரநலம் பெறவே
முயல்வாய் என்றெனை முடுக்கிய முக்தனே
பயில்வாய் கலையென பகர்வாய் எனக்கே
துயில்வாய் தூங்காமலே துக்கம் நீக்குவாயே

நீக்குவாய் ஆணவம் நிர்மலனே கோவிந்தா
போக்குவாய் பிறவியை புண்ணிய மூர்த்தியே
ஆக்குவாய் அன்பனாய் ஆறாதாரம் கடந்தே
மூக்குவாய் கண்செவி முதிர்ந்திட ஈதிடு

ஈதிடு தருணமிதே இணையிலா சித்தனே
ஊதிடு எம்வினையை உணர்வுறு நிலையருளே
வாதிடு வேனோயுனை வணங்கி வாழ்வேனே
மாதிடு அருளுக்கு மனமுருகி பணிந்தேனே

பணிந்தேனே உந்தன் பாதகமலந் தனையே
துணிந்தேனே பவக்கடல் துயரதனை நீக்கவே
தணிந்தேனே துன்பதால் தடுத்தாட் கொண்டதால்
அணிந்தேனே பாமாலை ஆசானே உந்தனுக்கே

| | | | |
|---|---|---|---|
| உந்தன் | மகிமை | உரைக்க | மகிழ்ந்தேனே |
| எந்தன் | மனதை | ஏற்பாய் | கோவிந்தனே |
| வந்தென் | மயக்கம் | வறுமை | மாற்றுவாயே |
| நந்தன் | தொடர்பு | நாளும் | இருக்கவே |

| | | | |
|---|---|---|---|
| இருக்கவே | இருக்கிறது | இனிதான | சன்மார்க்கமே |
| பெருக்கவே | அருள்க | பேரின்பம் | கூடிடவே |
| அறுக்கவே | ஆசையை | அன்பரோடு | சேர்த்துவை |
| சிறக்கவே | போற்றவே | சித்தனென | ஊரெலாமே |

| | | | |
|---|---|---|---|
| ஊரெலாம் | போற்றும் | உத்தம | சற்குருவே |
| பேரெலாம் | கோவிந்தா | போலவோ | உலகிலே |
| யாரெலாம் | இருந்தாலும் | யாதுனை | நாடுவேனே |
| கூறலாம் | இணையிலை | உந்தனுக்கு | உண்மையே |

| | | | |
|---|---|---|---|
| உண்மையே | கடவுள் | உணர்ந்தால் | பேரின்பமே |
| பெண்மையே | நாமெலாம் | பெம்மானை | கூடுவோமே |
| அண்மையே | இருக்கிறார் | அவனடி | பணிவோமே |
| திண்மையே | ஊட்டி | தீரனாக்கு | எங்களை |

| | | | |
|---|---|---|---|
| எங்களை | காத்திடும் | எங்குல | தெய்வமே |
| திங்களை | சூடிய | திருவும் | நீதானோ |
| மங்களை | வாழ்வருளி | மாட்சிமை | காணவை |
| உங்களை | டிமையெனை | உய்விப்பா | யுடனே |

| | | | |
|---|---|---|---|
| உடனே | வருகவே | ஊர்த்துவம் | அருள்கவே |
| கடனே | என்றிடாதே | கடவுளாய் | காப்பாயே |
| கூடரே | ந்திடாது | சாயுச்சியம் | பெறவே |
| மடதே | சமகற்றி | மகிழ்வருள் | ஐயமே |

| | | | |
|---|---|---|---|
| ஐயம் | தீர்ப்பாயே | ஐயா | சரணமே |
| ஐயை | அருள்பெற | ஐக்கியம் | ஆகவே |
| ஐயெ | ட்டுநாள் | ஐம்புலம் | ஒடுக்கியே |
| ஐயம் | கேட்டேனே | ஐயனுன் | அடைக்கலமே |

| | | | |
|---|---|---|---|
| அடைக்கலம் | ஆளவரை | ஆதரிக்க | வேண்டாமோ |
| படைக்கலம் | எதற்கு | பகவானே | நீயிருக்கவே |
| உடைக்கலாம் | உடலை | உணர்வால் | ஒளியால் |
| படைக்கலாம் | சாதனை | பரமகுரு | ஊனிலே |



| | | | |
|---|---|---|---|
| ஊனிந்த | மண்ணில் | உதிராது | நிலைக்கவே |
| வானிந்த | மழைவாழ | வரந்தந்து | காப்பாயே |
| ஏனிந்த | தாமதம் | ஏழையெனை | ரட்சிக்கவே |
| நானிந்த | பூமியில் | நாறியது | போதாதா |

| | | | |
|---|---|---|---|
| போதாதா | சோதனை | பேதையெனை | உயர்விடு |
| வாதாதா | வரந்தனை | வல்லமை | சித்தனே |
| மேதாதா | கோவிந்தா | மேன்மை | யடையவே |
| மாதாதா | ஞானக்குனி | மன்னவா | இன்பதே |

| | | | |
|---|---|---|---|
| இன்பது | கிட்டிட | இடவலம் | பாற்றியே |
| ஒன்பது | சுற்றினேன் | ஒளிதனை | காணவே |
| துன்பது | நீங்கிட | துலக்கம் | தந்தவனே |
| அன்பது | அருளது | அப்பனே | உன்வடிவே |

| | | | |
|---|---|---|---|
| வடிவே | வலகோ | வந்தது | திருமாலோ |
| அடிவே | தனையாள் | அமுறிடாது | அருளே |
| இடிவே | நவிழுமோ | இன்றுள | நிலையிலே |
| கடிவா | எழுன்னிடம் | கோவிந்தா | ஓங்காரா |

| | | | |
|---|---|---|---|
| ஓங்கார | மயமே | ஓதிடு | உபதேசமே |
| ஆங்கார | மடக்கி | ஆண்டிடு | என்னையே |
| ரீங்கார | மென்னுள் | ராப்பகல் | கேட்டிடவே |
| பாங்காக | அருள்வாய் | பரமாத்ம | சொரூபனே |

| | | | |
|---|---|---|---|
| சொரூபமே | பொன்னாக்க | சொன்னார் | இராமலிங்கமே |
| அரூபமே | யானவனை | அடியேன் | அறியவே |
| நிரூபமே | புரிந்திட | நீயருள் | கோவிந்தா |
| உரூபமே | ஒளியாக | உதவிடு | உத்தமனே |

| | | | |
|---|---|---|---|
| உத்தமனே | ஞானியாம் | உணர்வுட | விருப்பானாம் |
| நித்தமுனை | தரிசிக்க | நீதானே | அருளணுமே |
| புத்தமுதே | புதுநறவே | புசித்திட | வைப்பாயே |
| சித்தமுன் | பாக்கியமே | சிவமாய் | வாழவே |

| | | | |
|---|---|---|---|
| வாழவே | மண்ணிலே | வானிலே | வாழ்வாங்கே |
| சூழவே | அன்பர் | சூக்குமம் | உரைத்தே |
| ஆளவே | வேண்டுமே | ஆண்டியாய் | இருந்தே |
| மீளவே | நாங்கள் | மீட்பனே | சரணமே |

சரணமே ஆனபின் சங்கடம் வரலாமோ
இரணமே எந்தன் இதயமே இரட்சிப்பாயே
சரணமே நீயானாய் காட்டுதிரு முகத்தை
மரணமே இல்லாது மகிழவே வைப்பாயே

வைப்பாயே வாழ்வாங்கு வையத்துள் வாழவே
துய்ப்பாயே என்றென் துன்பம் நீக்குவாயே
கைப்பாயே யானால் கதறுவேன் இனிப்பாயே
நைப்பாயே நாங்கள் நலமடைய பூரணனே

பூரணனே புண்ணியனே பூவியேறி வருகவே
காரணனே நாதனய்ய கட்செவி திறப்பாயே
நாரணனே கோவிந்தா நான்மறை வித்தகா
கூறணுமே நல்வாக்கு குறைநீக்கு குருவே

குருவே கோவிந்தா குணம் தா ஆனந்தா
வருவே உன் பாதம் வரம் தா நிரந்தரா
அருவே என்னாருயிரே அபயம் அபயமே
உருவே காட்டாது உலைவது சரியா

சரியா தவறா என சிந்தித்து உணரவை
சரியா பார்க்கும் சன்மார்க்கம் நிற்கவை
சிரியா மலே நின்றிட சத்சங்கம் கூட்டிவை
சரியா னதருணம் சற்குருவே ஊட்டிவை

ஊட்டிவை அமுதை ஊர்த்துவம் அருளே
மாட்டிவை மனதிலே மார்ச்சாலம் ஆனேனே
பூட்டிவை த்ததை பூரணமாக திறந்திடே
ஆட்டிவை த்திடாதே ஆனந்த ஆதிதனே

ஆதிதனே அப்பனே அம்மையே அருட்குருவே
கதிதான் நீயெனக்கே கருணையால் ஆள்கவே
பதிதான் உணரவே பாவியேன் மீளவே
அதிதியே போற்றி அன்புடன் நிலைக்கவே

நிலைக்கவே ஊனுடலும் நித்தியம் கூடியே
கலைக்கவே முடியாமல் கருணையோடு வாழவே
அலைக்கவே செய்தால் ஆண்டு போவேனே
மலைக்கவே வேணுமே மாநிலமே எனை பார்த்தே



பார்த்தே இருக்காதே பரிந்தருள் கோவிந்தா
சேர்த்தே வைப்பாயே சேவடியில் எம்மையே
ஈர்த்தே விட்டாயே ஈண்டினி எங்குறுவேன்
சீர்த்தே வையெலாம் சீக்கிரம் அருள்வாயே

அருள்வாயே அற்புத ஆனந்த நிலையே
அருள்வாயே அடியவர் ஆயிரம் ஆயிரமே
அருள்வாயே அகத்திலே அன்பு ததும்பவே
அருள்வாயே கோவிந்தா அட்டமா சித்தியே

சித்தியே மட்டுமன்றி சிவமும் வேண்டுவனே
புத்தியே தெளிந்திட புருவத்தினை நின்றிடவே
உத்தியே அறிவித்து உன்னத நிலைபெறவே
சத்தியே வருவாயே சர்வமும் உணரவே

உணரவே அருள்புரிக உத்தமனே கோவிந்தா
உணரவே உடற்கூறு உலகநிலை கலைகளை
உணரவே அன்பை உன்னை என்னை
உணரவே பார்க்கவே உலகன்னையை வழிகாட்டே

காட்டே எந்தனுக்கு கண்மணியே ஒளியே
வீட்டை விட்டோடாது வீடுபேறு பெற்றிடவே
ஓட்டே துன்பத்தை ஓங்கார ரூபனே
பாட்டே பட்டபாடே பாவியினை மீட்பாயே

மீட்பாயே மழலையான் மாதா நீயே கோவிந்தா
பீப்பாயே என்வயிறு பிணமாகி போகாதருள்
காப்பாயே எந்நாளும் கருணை மிக்கோனே
கேட்பாயே குமுறலை கேட்டினை அகற்றிடே

அகற்றே எந்தன் ஆணவத்தை துன்பத்தை
அகத்தே ஒளிரும் அத்தனை கூடவே வை
இகத்தே செல்வமும் இன்பமும் பெற்றே
பாத்தே உணர்ந்தே பண்போடு வாழ்வேனே

வாழ்வேனே வள்ளலார் வழிகாட்டிய படியே
தாழ்வேனோ துன்பதால் தடுத்தாள இருக்கிறாயே
மீள்வேனே பவக்கடல் மிகுகருணை தெய்வமே
ஆள்வாயே கோவிந்தா ஆண்டுகள் போகிறதே

போகிறதே
வேகிறதே
சாகிறதே
நோகிறதே

மானம்
நெஞ்சம்
சரி என்றால்
உடல்மனம்

புண்ணியம்
வேறு
செத்துவிட
நோன்புதான்

இவையா
வினையை
தயார் நானே
புரிந்திலனே

புரிந்திலேன்
அறிந்திலேன்
எறிந்திலேன்
தெரிந்திலேன்

புண்ணியம்
நல்லோரை
மும்மலம்
கோவிந்தா

புழுவினும்
அகத்தில்
எப்படியான்
தென்குமரி

கடையேன்
அழுக்கே
மீள்வேன்
இருப்பவனே

இருப்பவனே
பொருப்பவனே
நெருப்பவனே
மறுப்பவனே

என்றும்
கோவிந்தனே
கூடாதவனே
நீள்களை

இன்பமாய்
பொறுப்பாய்
நெஞ்சில்
மன்னிப்பாய்

உலவுகிறோனே
என் பிழை
நிறைந்தாயே
என்னையே

என்னையே
உன்னையே
அன்னையே
முன்னையே

மாற்றிடாதே
நம்பினேன்
கோவிந்தா
குருவானவா

எங்களை
உற்றதுணை
அறுகம்புல்
முதிர்ந்த

காப்பாற்றையா
யாவாயே
சித்தருக்கு
ஞானியே

ஞானியே
ஆனியே
சூனிய
கூனியே

அருளிட
வருமோ
யங்களோதும்
வாழ்கிறேன்

ஞாயிறென
ஆபத்பாந்தவ
சூழாமல்
கோவிந்தா

வருகவே
னிபிருக்க
காப்பாயே
குறைதீர்

குறைதீர்
நிறைவான
பறைவேன்
இறைவன்

கோமானே
வாழ்வை
உன்புகழை
அடியவனே

கோபம்
நிர்மலனே
பக்த
இனிநானுன்

களைவாயே
தருவாயே
வத்சலனே
அடியவனே

அடியவனே
அடியனும்
கொடியவனே
மடியவன

நடராசன்
சத்சங்கத்தில்
யானெனினும்
ல்லையான்

அடியவனே
அணைந்திட
குருமாரே
மாநிதியம்

வீரபாகுவே
அருள்கவே
மன்னிப்பீரே
கிட்டவை

கிட்டவை
கிட்டவை
எட்டவை
நட்டவை

பரிபூரணம்
ஜோதிநாதா
தியோனை
மலர்ந்திட

கோவிந்தா
கிருபை
எட்டிரன்
நாடினேனுன்

நடராசாபுன்
புரிகவே
டுரைக்கவை
பாதமே



பாதமே
கீதமே
பூதமே
வாதமே

போற்றி
பாடினேன்
கரைந்திட
கூடாது

பணிந்தேன்
கோவிந்தா
புண்ணியம்
வல்லமை

பாலாவே
அறிவாயே
தருகவே
வேண்டுமே

வேண்டுமே
நீண்டுமே
கூண்டுமே
யாண்டும்

பதினாறும்
வறுபத்தி
வேறியே
கோவிந்தா

வேதனைதான்
நான்கும்
குவலயம்
யாசிக்கும்

தீர்க்கவே
ஓங்கவே
காணவே
ஏழையே

ஏழையே
கூழையே
வாழைய
ஊழையா

தான் நான்
குடிக்கவும்
டிவாழையாய்
ன்வென்றிட

ஏறெடுத்து
கோவிந்தா
வந்துதித்த
ஊர்த்துவம்

பாரையா
வழியில்லையே
வள்ளலே
ஏற்றிடே

ஏற்றிடே
மாற்றிடே
காத்திடே
தூற்றிடா

ஏறாநிலையில்
மனிதனாய்
எந்தனை
வாழ்வை

ஏகம்பத்
மாநிலம்
கருணை
தருவாய்

தூடே
போற்றவே
உள்ளவா
தூயவனே

தூயவனே
மாயவனே
சேயவனே
காயவனே

துடிக்கும்
மறந்தும்
என்றெனை
என்றிடாதே

துவளும்
மறக்கருணை
சேர்த்தனை
கனிவிப்பாய்

எனைக்கா
புரியாதே
துயர்தீர்
கருணையாலே

கருணையாலே
தருணமிது
அருணனை
இருணீக்கி

ஆட்கொண்ட
அல்லவோ
மதிவழியே
எந்தன்

கன்னிய
தாமதிப்ப
அகத்திலே
இதயத்தில்

மிக்கவா
தழுவோ
புகவே
துலங்கவே

துலங்கவே
கலங்கவே
மலங்கவே
குலங்காக்

துக்கம்
விடாதே
விழிக்கிறேன்
கவேவா

தூரவே
கோவிந்தா
மயக்கம்
குணாதீதா

ஓடுமே
கருணைசெய்
போக்கிடே
மாமனிதா

மாமனிதா
காமினிதா
சேயினிதா
காமனிதோ

எங்கள்
எந்தனை
அருளோடு
வருகிறானோ

மாதேவா
கனிவிக்கச்
செல்வம்
கடாசிட

மன்னவா
செய்வாயே
எல்லாமே
பாட்டாயா

மாட்டாமலே இனியான் மீண்டிட அருள்வாயே
மீட்டாமலே நாதம் மேனியுள் கேட்கவே
காட்டாமலே போகாதே கோவிந்தா திருமுகத்தை
ஓட்டாமலே இருந்தால் ஓங்கிடுமே துன்பமே

துன்பமே இல்லாத தூயவாழ்வு வேண்டுமே
இன்பமே இனிநாளுமே இணையிலாகுரு பெற்றேனே
அன்பனே என்றெனை அரவணைத் தருள்கவே
என்பனே கோவிந்தன் எந்தன் சுவாமியே

சுவாமியே கடரே சுத்தபரி பூரணமே
வாமியே காத்திட வந்தானே வளையே
காமியே பூமுகத்தை கருணை காட்டுகவே
சேமியேன் இருவினை சேர்ந்தேன் சத் சங்கமே

சாங்கமே சார்ந்ததால் சாவிலிருந்து தப்பினேனே
அங்கமே நோகுதே அவச்சொல் கேட்டே
பங்கமே ஆகாதே பாவிநான் மீளவே
தங்கமே சுயஞ்ஜோதியே தவறினை மன்னிப்பாயே

மன்னிப்பாய் என்றுதான் மனமகிழ்ந் திருக்கிறேன்
உன்னிப்பாய் கவனிக்க உறுதுணை ஆவாயே
என்னிப்படி சோதனை என்னிலை நீ அறியாததா
உன்னிப்படி பேறிடவே ஊர்த்துவம் ஏறிடவே

ஏறிடவே வெளியிலே ஏகாந்தம் பெற்றே
கூறிடவே பணிந்தேன் கோவிந்தா வழியினை
மாறிடவே வந்தேன் மறுபிறவி வேண்டாமே
தேறிடவே துணையாவாய் தேவாதி தேவனே

தேவனே இன்னமும் தேரலையா காப்பாயே
ஆவன செய்வாயே ஆபத்தினை நீக்குவாயே
போவன பாவமே போக்கிலை வேறெனக்கே
ஈவனே கொடுப்பாயே ஈதனக்கு எளிதே

எளிதே ஓங்கிட எனக்கருள் தருவாயே
பழிதான் வாராதே பக்குவமாய் கூடிடவே
விழிதான் வழியே விக்கினங் களைவாயே
களிதான் போதுமே கோவிந்தா வருகவே



வருகவே எந்தன் வல்வினை நீக்கவே
தருகவே முக்தி தத்துவ வித்தகனே
பெருகவே ஞானம் பெம்மானே அருள்கவே
முருகவே ஏமூலமே முக்கியம் ஆகிடவே

ஆகிடவே முதிர்ஞானி ஆண்மகனே ஆற்றல்தா
போகிடவே பொல்லாப்பு போதும் தா நிலையாகவே
ஏகிடவோ வினைவிட்டு ஏந்தலே கூறுக நீ
நோகிடவே செய்குதே நோவினை ஓட்டிடு

ஓட்டிடு தீயவர்களை ஓடஓடவே ஒளியானவா
மீட்டிடு என்னையே மாளாமல் காத்திடு
காட்டிடு உன்னையே கண்ணாமூச்சி வேண்டாம்
ஊட்டிடு நான்வாழ உன்கையால் அமுதமே

அமுதமே திகட்டாத ஆனந்தமே அனுபூதியே
குமுதமே குணாதீதா குடும்பம் தழைக்கச் செய்
சுமுகமா கவேசுற்றி சாஸ்வதம் நிற்கணுமே
சமுகமே வாழ்ந்திட சாற்றிடு சன்மார்க்கமே

சன்மார்க்கம் நிலைக்கவே சத்சங்கம் துலங்கவே
நன்மார்க்கம் இதை நாநிலம் நன்கறியச் செய்யவே
என்மார்க்கம் இதுதான் என்கோ விந்தனே
உன்மார்க்கம் வேறில்லை ஊர்த்துவ கதியானே

கதியானே கற்பிப்பாய் கலையெலாம் கனிவாகவே
விதிதானே என்றிடாதே விட்டிடாதே விரட்டிப்பிடி
சதிதானே வாட்டுது சம்ஹாரம் செய்திடே
புதிதான வாழ்வினை பெற்றிடல் சத்தியமே

சத்தியமே உன்னருளால் சாவாநிலை பெறுவேனே
நித்தியமே உறைவேன் நிர்மலனே அருள்வாய்
பத்தியமே காத்திட பக்தனை அரவணையே
கட்டியமே கூறுவேன் கடவுளின் குழந்தையே

குழந்தையே நானுனக்கு குருதேவா குறைதீர்
உழன்றேனே உலகிலே உண்மை உணராமலே
அளந்தேனே அறியாதே அறிவித்திடு அதிதனே
உளந்தானே கோவில் உள்ளிலே கடவுளே

கடவுளே கண்ணின் கருமணியே கோவிந்தா
நடவுளே என்றுநீ நான்நடக்க அருளே
படவுளே பொற்கதிர் பொதிந்து கிடக்குதே
திடமுளே தந்தருள் தீனதயாளா முனிவனே

முனிவனே தருவாய் முதிர்ச்சியே முப்பாழிலே
இனியவனே தேறிட இணையடி சூட்டுவாயே
தனியனே எனக்கு தக்க துணை ஆனவனே
சனியனே என்றிடாதே சகலகலா வல்லவனே

வல்லவனே நாளுந்தான் வல்லமையுடன் வாழவே
கல்லவனே என்றிடாது கருணைமழை பொழிக
வில்லவனே அம்புநான் விண்டு நீ உரைக்கவே
நல்லவனே கோவிந்தா நாளும்ப ஆசிதா

ஆசிதா ஆற்றிடு அவலம் மாற்றிடு
ஊசிதா ஞமையுமோ உள்நாடி போகையிலே
பாசிதா னோமலம் பிய்த்து எறிந்திடு
தூசிதா னோயுனக்கு தூதுவனாக்கு போகணுமே

போகணுமே வரவு போக்கற்று புவியிலே
சாகணுமே மனம் சாத்தியம் அசாத்தியம்
ஆகணுமே வாழ்வு ஆறாதாரம் தாண்டணுமே
ஈகணமே அருள் ஈசாயோக நேசனே

நேசனே நினைவுதான் நீண்டே போகுதையோ
நீசனே யான்என் நிலையுணர செய்வாய்
தேசனே திரவியமே திகட்டா அமுதமே
வாசனே வாரியே வழங்கும் வள்ளலே

வள்ளலே என்னை வளமை யாக்கிடுவாய்
துள்ளலே இலாது துடிப்படக்கி ஆண்டிடுவாய்
தள்ளலே லென்னை தவறுகளை மன்னிப்பாயே
உள்ளிலே உள்ளதை உணர்ந்து உருகவே

உருகவே அன்பால் உலகை வெல்லவே
பருகவே அமுதம் பத்தாமிடஞ் சேர்ந்தே
கருகவே வினைகள் கத்தனை காணவாமே
பெருகவே என்றெனக்கு பெருநிதியம் அள்ளித்தா



அள்ளித்தா விரைத்தேன் அடாதுபல புரிந்தேன்
துள்ளித்தான் திரிந்தேன் திமிராகவே பேசினேன்
எள்ளித்தான் நகைத்தனர் என்செயல் கண்டே
நுள்ளித்தான் எறியே நிர்மலனே நிர்குணனே

நிர்குணனே நின்நாமம் நான்பாட அருள்வாயே
எற்குண வளித்த எந்தையே எற்றருளே
சற்குண சாந்த சொரூபனே கோவிந்தா
நற்குண நற்செயல் நான்புரிய நாடினேனே

நாடினேனே உன்பாதமே நல்லருள் புரிகவே
பாடினேனே அந்தாதி பணிவுடன் சமர்ப்பணமே
கூடினேனே சத்சங்கம் கோவிந்தா விரபாகுவாமே
தேடினேனே நற்கதி தேற்றியே வாழ்த்தே

வாழ்த்தே வேண்டும் வாழ்வாங்கு வாழவே
ஆழ்த்தே அன்பினில் அருள் கடலினுள்
ஊழ்த்தே கமொளியாக ஊர்த்துவம் தருகவே
ஆள்த்தே டிமலையாதே அடிமைநான் இருக்கையிலே

இருக்கையிலே இருந்தாலே இறவாநிலை பெறலாமே
பருக்கையிலே சோற்றாலே பரிதவிப்பு கூடிடுமே
பெருக்கையிலே அக்கினியை பேதந்தான் அற்றிடுமே
குருகையிலே ஆணாக்கால் குறையிலை நித்தியமே

நித்தியமே வேண்டினேன் நிர்விகல்ப மானவனே
வட்டியுமே கொடுத்து வாழ்விருந்து போனேனே
கத்தியுமே கேட்கலையோ கோவிந்தா கருணைபுரி
புத்தியுமே பேதலிக்குமே பேரருள் தராவிடிலே

தராவிடிலே உயிர் தரியேன் ஒருகணமுமே
பராவிடலே லட்சியம் பாவியேனை ரட்சிப்பாய்
இரா விடிலோ கருணை இருப்பதில் பொருளில்லை
குலாவிடிலே வேண்டும் குவலயம் சிறக்கவே

சிறக்கவே ஆசை சிர்தருக வள்ளலே
மறக்கவே வேண்டும் மாயாதுக செயலை
இறக்கவே கூடாது இனியான் என்றுமே
பிறக்கவே கூடாது பித்தாகி போனேனே

போனேனே
ஆனேனே
ஊனேநி
தானேதே

மூடனாய்
சீடனாய்
லைக்கவே
டியதேவா

போதம்
ஆதரிப்பாய்
ஊறவே
தன்னிகரிலா

தருகவே
ஆசானே
அமுதமே
தந்தையே

தந்தையே
சிந்தையே
விந்தையே
எந்தையே

தாயே
துலங்க
புரியும்
காத்தருள்

தலைவா
சிவானுபூதி
வீரனே
ஏற்ற

தற்பரனே
கிட்டவே
கோவிந்தா
தருணமிதே

தருணமிதே
தருணமிதே
கருணாலயா
அருணலய

அருளிட
பொருள்தா
காத்திடு
மாகவே

தயாபரா
தத்துவனே
கோவிந்தா
அற்புதம்

தாமதியாதே
தடுத்தாள்
கருணைசெய்
நிகழுவே

நிகழுவே
திகழுவே
புகழுவே
இகழுவே

சிரிய
இன்பம்
உலகு
கூடாது

நிலைத்த
திகட்டா
புலவன்
இனியான்

வாழ்வே
ஆனந்தமே
இவனையே
முக்தனே

முக்தனே
பக்தனே
புத்தனே
அத்தனே

முக்தியை
வேண்டினேன்
வந்தானோ
உந்தனுக்கு

முச்சந்தியில்
பரிந்தருள்
புண்ணியம்
ஆனானோம்

சேரவே
நல்குவாய்
குமரியிலே
ஆதரியே

ஆதரியே
ஆதரியேன்
அதரியேன்
ஆதரிப்பாய்

என்னையே
வினையே
நிலைக்க
அடியனை

ஆபத்பாந்
ஆற்றுப்
ஆளாக்கு
அருள்வாய்

தவனே
படுத்தே
வாயே
அன்பாகவே

*சுபம்*

**தானமும் தவமும் செய்க!**

**ஞான நூற்களை வாங்கி
ஞானதானம் செய்க!
மெய்ப் பொருளை உணர்ந்து
தவம் செய்க!**



# அருட்பெருஞ்சோதி அந்தாதி



**ஓம் ஸ்ரீம்இராமலிங்கம் ஜெயம்**

## அருட்பெருஞ்சோதி அந்தாதி

எல்லாம் வல்ல இறைவன்! எங்கும் நிறைந்த இறைவன்! ஜோதியாக இருக்கிறான் என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்கின்றனர்.

இன்று உலகில் இருக்கின்ற அனைத்து மதங்களும் இதைத்தான் சொல்கின்றனர். மந்திரங்களில் நான் காயத்ரி என பகவத் கீதையில் பகவான் கூறுவதும், பைபிளில் தேவன், இறைவன் ஒளியாயிருக்கிறார் என கூறுவதும் ஒன்று தானே!

இதையே தான் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் இறைவன் தன்மை, குணம், நிலை எல்லாவற்றையும் சேர்த்து அருள் பெரும் ஜோதி என்றார்!

கர்மத்தால் உந்தப்பட்டு அலைக்கழிக்கப்படும் மனிதன் தன்னை உணர்ந்து - தன்னுள் வீற்றிருக்கும் அந்த இறைவனை அறிந்து மரணமிலா பெருவாழ்வு பெற சாதிக்கும் வழிமுறைகளை எளிமையாக கூறி வழிகாட்டியுள்ளார்கள் சித்தர்களும் ஞானிகளும்.

வாழையடி வாழை என வந்த அந்த திருக்கூட்ட மரபினில் தோன்றியவர் தான் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்.

நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன் இனி எல்லோர் உள்ளத்திலும் புகுந்து கொள்வேன் என உறுதி கூறிய வள்ளல் பெருமானே மிகமிக எளிதாக எல்லோரும் உணரும் படியாக உரைத்து, தகுந்தவர் வழியாக உணர்த்தி, எல்லோரையும் பெருதற்கரிய பேரின்ப பெருவாழ்வை அடையச் செய்வித்து கூடவே இருந்து காத்து அருள் புரிகிறார்கள். இதுவே சத்தியம்!

இந்நூல் எழுத வைத்து, வெளியிட செய்து, எல்லோரும் உணர வேண்டுவதற்காகவே அடியேனை பணித்திருக்கின்றார்கள். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எல்லோரும் வாருங்கள் வாழ்வாங்கு வாழலாம்! சற்குருவே துணை!

தாயின் அரவணைப்பு, தந்தையின் பராமரிப்பு, குருவின் கண்காணிப்பு இருந்தால் இறைவனை நாம் அடையலாம்.

மாதா, பிதா, குரு அதற்குபிறகு தான் தெய்வம். சிந்தியுங்கள்! உணருங்கள்.



## அருட்பெருஞ்சோதி அந்தாதி

### காப்பு

அருட்பெருஞ்சோதி அந்தாதிபாடு என என்னுள் ஒலித்தவரே
அருட்பெருஞ்சோதி ஆதிமுதல்வனே எங்கும் நிறை ஒளியானவரே
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி அகமிருந்தருள் சோதிநீயே எமக்கு காப்பு.

### நூல்

ஆதிஅந்தமும் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நீதிநெறியாய் நாளும் வாழ வழி காட்டு வள்ளலே
ஓதி முடியாது உன் புகழை உன்னாலே வாழ்கின்றேன்
சோதி ஒன்றே எங்கும் நிறைந்த பரம்பொருளே

பரம்பொருளே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கரப்பொருள் ஒன்று காட்டுவித்து கைவல்யமாக்கு
சிறப்பொருள் நான்பெற சிந்தனை தந்து செம்மையாக்கு
பரப்பொருள் மூன்றும் புன்னகையால் வென்றவனே

வென்றவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நின்றவன் ஆடுகின்ற சேவடி கண்ட புண்ணியனே
சென்றவன் வழி நடந்து சீர் பாதம் நான் பெற அருளே
இன்றவன் புகழ்பாடும் எனக்கருள் புண்ணியனே

புண்ணியன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கண்ணியன் ஆனேன் என நாளும் களிக்கச் செய்வாய்
திண்ணியன் இவனென திருமுகம் வழங்க அருளோ
உண்ணிணின் நுருக்கியோர் ஒப்பில்லா ஆனந்தமே

ஆனந்தம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தானந்தம் இல்லா சதுர் மறை போற்று நாயகா
நானந்தம் ஆதிநிலை யான உனை அடைய அருள் தா
ஏனந்த நிலையருளா தயக்கம் அன்புருவே

அன்புருவம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
என் புருவம் தாங்கிய எம்மையும் காத்தருள்வாயே
என் புருவ நடுவிளங்கு கற்பூர சோதி மணியே
என் புருடன் நீதானே எங்குமாய் இருப்பவனே

இருப்பவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
உருப்பவன் தங்கியது என்னுடலில் சிரம்தானே
கருப்பவன் வண்ணம் கண்டுகொள் வீர் மானிடரே
நெருப்பவன் தன்மையாம் உணர்ந்து கொள் பூரணத்தை

பூரணம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
காரணம் உலகில் பிறக்க பல இருப்பினும் நமக்கு
ஆரணம் மேலாசை முதலாய் பலவும் வந்து சூழ்ந்து
மாரணம் வந்திடுமே வென்றிட அருள் சுயஞ்சோதியே

சுயஞ்சோதி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சுயம்சோதி த்தெனை மயலற அருள் பரிபூரணனே
பயம்சோதி த்தெனை வீரப் பெண்ணாக்கி ஆண்டருளே
நயம்சோதி த்தெனை பண்படுத்தியருள் பரஞ்சோதியே

பரஞ்சோதி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தாம்சோதி த்தெனை தன்னருளால் களிப்புறச் செய்
கரம்சோதி ஏந்தி கடுவெளிதனை கடக்க அருள்
பரம்சோதி நீ வந்து பற்றிக்கொள் அருள் சோதியே

அருள்சோதி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மருள்சோதி யால் விலகும் மருவுகின்ற மாந்தரேயறிவீர்
உருள்சோதி வடிவாய் எனக்கருளும் காட்சிப் பொருளே
இருள்சோதி வரவால் விலக்கியாளும் சிவ சோதியே

சிவசோதி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சிவசோதி நீதானே சுயமாய் பரமாய் அருள் மயமானாய்
சிவசோதி உனைப்பற்ற சுயமாய் என்னுள் நீ அமர்ந்தாயே
சிவசோதி உனைப்பெற்ற நான் நீயாவேன் மெய்ப் பொருளே

மெய்ப்பொருள் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மெய்ப்பொருள் விளக்கம் எங்குருராமசாமி மொழிந்ததுவே
மெய்ப்பொருள் ஒன்றே மேன்மையுற வழிகாட்டுமே
மெய்ப்பொருள் கண் என காட்டுவித்த எட்டிரண்டே

எட்டிரண்டும் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
எட்டிரண்டும் அகார உகாரம்தானே ஆன்றோர் உரைத்தது
எட்டிரண்டும் சூரிய சந்திரன்தானே சான்றோர் உரைத்தது
எட்டிரண்டும் வலக்கண் இடக்கண் என்ற சிவ சக்தியே



சிவசக்தி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சிவசக்தி சேர்ந்தாலே நமக்கு முன் சண்முகம் தோன்றும்
சிவசக்தி ஒன்றாலே தான் பராசக்தி அருள் பெறலாகுமே
சிவசக்தி சண்முகமாகி பராசக்தியுமாகி ஒளிர்பவனே

ஒளிர்பவனே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஒளிர்பவனே உலகெங்கும் காப்பவனே ஒப்புயர்வற்றவனே
ஒளிர்பவனே ஆணும் நீ பெண்ணும் நீயே எல்லாம் நீயே
ஒளிர்பவனே உன்கடைக் கண்காட்டு சின்மயமே

சின்மயம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
உன்மயம் நான்பெற உதவியருள் ஒப்பில்லாதவனே
சின்மயம் எது என உணர்த்திய சிங்கார ரூபமே
தன் மயமா எவனைத்தும் தந்தருள் தத்துவமே

தத்துவம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஒப்பவன் யாரும் இல்லாநெடிய ஒப்பிலியப்பனே
தப்பவன் செயலென யாருமெனை தூற்றாது காப்பாய்
மாப்பவன் சன்னிதியில் மண்டியிட்டேன் மாசற்றவனே

மாசற்றவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மாசற்றவன் மனத்தகத்தேயமர்ந்தருளும் சோதி சொருபனே
மாசற்றவன் நான் என பாநிலத்தோர் மகிமை செய்ய அருள்
மாசற்றவன் தொண்டர் நலம் காக்கும் நாதமணியே

நாதமணி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நாதமணி என் காதில் ஒலிக்கச்செய் பிரணவ சொருபனே
நாதமணி தசவிதமாய் நானும் கேட்க அருள் நாயகமே
நாதமணி கேட்பார் காண்பார் உனை கண்மணியே

கண்மணியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கண்மணியே கருத்தினால் உணர்வுபெற அருள் கனவனே
கண்மணியே கதி என இருந்தால் ஞான கண் பெற்றிடலாம்
கண்மணியே மணிஒளியே பிறவி அறுக்கும் மாமருந்தே

மாமருந்து நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மாமருந்து சோதி மருந்து பிணிக்கு மருந்து நல்ல மருந்திது தானே
மாமருந்து எனக்கும் அருளவேண்டும் வைத்தியநாதரே
மாமருந்து பாநிலத்தோர் தெரிய வைப்பாய் திருச்சிற்றம்பலமே

திருச்சிற்றம்பலம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
திருச்சிற்றம்பலம் தனில் இருக்கும் பாங்கை உணர்வார் யாரோ
திருச்சிற்றம்பலம் திரு உரு சிறிய இடத்தில் அம்பலம் ஆனதே
திருச்சிற்றம்பலம் தெரிய உணர வைத்தாய் அம்மையப்பனே

அம்மையப்பன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
அம்மையப்பன் உனைநான் மனம் புரிய அருள் மூலமே
அம்மையப்பன் மைந்தன் என்துன்பம் நீக்கா திருப்பதேன்
அம்மையப்பன் அருள் பெறில் அவனியெலாம் ஆனந்தமே

ஆனந்தம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஆனந்தம் உனையடைதல் அன்றிவேறு நிலையுமுளதோ
ஆனந்தம் அனைத்துயிர் மீதும் அன்பு காட்டுவதில்தானே
ஆனந்தம் என்றுமிருந்திட எனக்கருள் பரமனே

பரமன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பரமன் உனைபணிவேன் பரிந்துள் உணர்வதெந்நாளோ
பரமன் உனை சிவன் நான் பற்றிட அருள் செய்வாய்
பரமன் நில் நாளும் இருக்க அருள் சுயம்புவே

சுயம்பு நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சுயம்பு லிங்கமாக என்னுள் நீ இருப்பதை காட்டு
சுயம்பு உன்னை படைக்கப்பட்டவை அறிவதுபூர்வமே
சுயம்பு அருளால் அறிவோமே நடராசனே

நடராசன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நடராசன் நடமிடும் தில்லையம்பதி கண்டு மகிழ்வீரே
நடராசன் நர்த்தனம் கண்டு மகிழ்ந்தால் நமனில்லைதானே
நடராசன் நின்றால் நாநிலம் இல்லை நாயகனே

நாயகன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நாயகன் நீ என்றால் நாயகி நானே எல்லாம் ஆனவனே
நாயகன் உன்னை நானடையுநாள் அருகிருக்க அருள்
நாயகன் நீயின்றி நானில்லையே அருள் வடிவே

அருள்வடிவே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
இருள்வடிவு கொண்ட எமை மீட்டு ஒளியளித்தருளே
பொருள் வடிவு காட்டி என்தனையும் புண்ணியனாக்கு
அருள்வடிவே நாளும் கொள்ள அருள் செல்வமே



செல்வம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
செல்வம் பதினாறும் பெற்று வாழ சீர் தந்தருளே
செல்வம் தங்கம் சேரச்செய்து செல்வம் அருளே
செல்வம் நான்தானே உன்பிள்ளை சிவமே

சிவமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சிவமே மங்களம் சிவமே ஒளி பரம்பொருள்
சிவமே பொருள் என கண்ணில் இருப்பவனே
சிவமே சிவனுடன் சேரமுக்தியாமே சக்தியே

சக்தியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சக்தியே என்னில் இல்லையெனில் அடையேன் சிவத்தை
சக்தியே பெற்று தாண்டவேண்டும் ஐந்தவத்தை
சக்தியே தாயாகி எனக்கு வந்தாய் கணநாயகனே

கணநாயகன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கணநாயகன் கணபதி கண்ணானபதி விக்னேசுவரனே
கணநாயகன் உன்னை தொட்டுத்தானே மேலே செல்வது
கணநாயகன் இல்லையேல் காரியம்தான் ஆறுமுகனே

ஆறுமுகன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஆறுமுகன் என்முன் தோன்றியருள செய்குமரனே
ஆறுமுகன் தந்தைக்கு முன்னே பிறந்த அருள் சோதியே
ஆறுமுகன் இராமலிங்கம் காண அருளிய நெடுமாலே

நெடுமால் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நெடுமால் திருமால் ஆலிலைமேல் பள்ளி கொண்டோனே
நெடுமால் என் இடர் தீர்த்த பெருமாள் என் கண்ணனவன்
நெடுமால் எம்மை காக்க அருள் மகாலட்சுமியே

மகாலட்சுமி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மகாலட்சுமி என் இல் இருந்தருள் அட்டலட்சுமியே
மகாலட்சுமி களை என் திருமுகம் விளங்க அருளே
மகாலட்சுமி கடாச்சம் பெற அருளே கலைவாணியே

கலைவாணி நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கலைவாணி அருளாலே காரியம் நான் படைத்திட செய்வாய்
கலைவாணி நீயின்றி கலைஞானம் கிட்டுவதெங்ஙனம்
கலைவாணி கருணை கிடைக்கச்செய் பிரம்மனே

பிரம்மன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பிரம்மன் படைத்தான் காத்து அருளி அழியாதிருக்கச்செய்
பிரம்மன் நான் என பஞ்சகிர்த்தியமும் எனக்கு அருளே
பிரம்மன் கண்மணி மாலை தொடுத்ததால்தேவனே

தேவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தேவன் மூவர் தேவி மூவர் முப்பத்து முக்கோடியுமுண்டே
தேவன் சபைதனில் ஆடிடும் அழகை தேவி நான் காணவே
தேவன் புருவநடு விளங்கசெய் வேதநாயகனே

வேதநாயகன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
வேத நாயகன் புராண இதி காச உபநிடத காவிய நாயகனே
வேத நாயகன் சதுர்மறை சாத்திரதோத்திர மூலப்பரம்பொருளே
வேத நாயகன் உனதருள் பெறவேண்டுமே ஆதிகுருவே

ஆதிகுரு நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஆதிகுரு சனகாதிக்கு தட்சிணாமூர்த்தியாக வந்தமர்ந்தோனே
ஆதிகுரு உனைபெற சற்குரு என் இராமலிங்கமே அருள்
ஆதிகுரு அவரவர் உள்ளில்தானே வள்ளலே

வள்ளல் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
வள்ளல் உனதருளால் வாழ்கின்றோம் இவ்வையகத்தே
வள்ளல் உனதருள் கிட்டவேண்டி கிடந்துழல்கின்றோம்
வள்ளல் வாரி வழங்கு பொருளை அருளை மாயோனே

மாயோன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மாயோன் என்றது மாயைதனை வெல்ல அருள்வதாலோ
மாயோன் மாய்ந்து நான்போகா திருக்க அருள்வாயே
மாயோன் பிறர்கண் ஆடுகிறானே நீலகண்டனே

நீலகண்டன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நீலகண்டமாய் விளங்கி நிர்மலமான சோதி காட்டுவிப்போனே
கால கண்டம் எல்லாம் கடந்துமேல் கருணை புரிவோனே
நீலகண்டம் கண்டத்துக்கு மேலென்ற பதமே

பதமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பதமே கதிஎன இருந்தாக்கால் பார்க்கலாம் பரமதை
பதமே காட்டி பதியுடன்கூட்டி பண்புரைப்பாயே
பதமே திருவடியே திருமுடியே பார்த்தனே



பார்த்தன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பார்த்தன் பார்வதி பார்ப்பான் பவித்திரமானவனே
பார்த்தான் எனக்கு சாரதியாயிருந்து பரவெளிகாட்டிடு
பார்த்தன் பார்த்தால் பாவந்தீருமே பரிபூரணமே

பரிபூரணம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பரிபூரணமாய் விளங்கும் பாங்கதனை பார்க்கவைப்பாயே
பரிபூரணம் நானடைய பக்குவமாய் என்தனையும் கா
பரிபூரணம் நின்றவுடலை வென்ற நிலையே கண்ணே

கண்ணே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கண்ணே மணியே ஒளியே அருள் கற்பகத்தருவே
கண்ணே எந்தன் காரணமே பரி பூரணமே அருளே
கண்ணே திருவடி சிவனிருப்பிடம் புருவ மையம்

புருவமையம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
புருவமையம் ஏதெனில் அண்டவுச்சி அதுவே மூக்குநுனி
புருவமையம் தனைபார்த்து விழித்திருந்தால் தோன்றிடும் சோதியே
புருவமையம் உள்ளிருந்து வெளிப்படுமே சோதியே

சோதியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சோதியே சுடரே சூரிய சந்திர அக்னி சேர்ந்ததுவே
சோதியே சிவனாய் எட்டிரண்டாய் இருக்கின்றதுவே
சோதியே ஆதியே அந்தமும் நீயே பேரின்பமே

பேரின்பமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பேரின்பமே என்னுள் நீ பொருந்திடவோ பரவசம் வருமே
பேரின்பமே உனைநான் அணுகாதபோது சிற்றின்பமே
பேரின்பமே வேண்டி தவமியற்றுவேன் பகவானே

பகவான் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பகவானே பக்தியால் பூசையால்உனை பாவத்தோடு பற்றுவேனே
பகவான் நீ எனை பரிதவிக்கவிடுதல் பார்க்க அழகலவே
பகவானே உன்னோடு சேர்த்தருள்வாய் கடவுளே

கடவுள் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கடவுள் ளே என்று கற்பித்தனரே சான்றோர் பலரே
கடவுள் ஒன்றே கருது மாந்தரே ஆதிமுதலானவனே
கடவுளை கண்டபின் காலன் இல்லையே ஆண்டவனே

ஆண்டவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஆண்டவன் நம்மை ஆண்டுகொண்டு இருப்பவனே
ஆண்டவன் அடிமை பேதந்தனைநீக்கி சமமெனஇருப்போமே
ஆண்டவன் அருள் வடிவானவன் இறைவன்

இறைவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
இறைவனை தேடாமல் இரைதனைதேட்டும் தேடும் மாந்தரே
இறைவனை கருதாமல் இருந்தாலுமக்கு இன்னும் பிறவியே
இறைவனை எண்ணினால் கருணை புரிவான்வாலறிவன்

வாலறிவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
வாலறிவன் உனது கால்பற்றி கடைத்தேறுவோமே
வாலறிவன் பெருமை நூலறிவினால் அளவிடமுடியுமோ
வாலறிவன் கருணையால் வினைதீர்ப்பான் எண்குணத்தான்

எண்குணத்தான் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
எண்குணத்தான் இவனென ஆய்ந்தறிதல் அவனியில் அரிதே
எண்குணத்தான் திருவடி சார்ந்தவர்தம் செப்புமொழி கேட்டால்
எண்குணத்தான் இறைவனே சேரலாகுமே உண்மையே

உண்மை நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
உண்மை தவிர்த்த அனைத்தும் உலகில் பொய்யே மாயையே
உண்மை பெற எனில் பொய்விட்டு மெய்புகுதலே
உண்மை மெய்யது எனில் கண்ணின் ஒளியே

ஒளியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஒளியே நீயல்லால் ஏதுமில்லை நின் அருள்தானே பாரே
ஒளியே ஓங்கிநிற்க ஊனவுடல் நீக்கிய வள்ளலே
ஒளியே ஓங்காரமே உண்மை வடிவ பொருளே

பொருளே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பொருளே மெய்ப்பொருளேஎன் கண்ணே கண்ணின் மணியே
பொருள் உலகில் சேர்ப்பதாகுமா அருள்கொண்டு
பொருள் பூரணம் ஆவது ஞானமே அறிவே

அறிவே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
அறிவே சுத்த அறிவே ஞானம் என நாட்டுவர் ஞானியர்
அறிவால் அறிவர் அறிவார் அறிவர் அவன் கீர்த்தியை
அறிவே அருளாய் அமர்ந்ததே தெய்வம்



தெய்வம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தெய்வம் பல என சிந்தைசெய்தால் சோர்ந்து போவோமே
தெய்வம் ஒன்றே தெளிந்து நில் செயலனைய ஒடுமே
தெய்வம் பெரும் சோதியயமே சத்தியமே

சத்தியம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சத்தியம் மரணமிலா பெருவாழ்வு வாழ்ந்திடலாம் வாரீர்
சத்தியம் சமரச சன்மார்க்கம் தழைக்கச் செய்யும்
சத்தியம் நித்தியம் சர்வ வியாபி சரவணனே

சரவணன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சரவணன் சண்முகன் சிவபாலன் முன்னுதித்தவன்
சரவணன் சாந்தமாய் நோக்கவேல் தந்து காப்பானே
சரவணபவ சாந்திதந்து காத்துஅருளே கண்ணனே

கண்ணன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கண்ணன் மாயை திறந்தாலுலகம் கண்ணுறலாம் நாமே
கண்ணன் குழந்தை கார்வண்ணன் என்கிருஷ்ணமணியே
கண்ணன் காப்பான் கர்மாவை செய்தால் அருள்வான்

அருள்வான் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
அருள்வான் பொய்த்தால் பாருலகில் பஞ்சம் வந்திடுமே
அருள்வான் அவன்தான் ஆபத்பாந்தவன் அனாத ரட்சகன்
அருள்வான் சரணடைந்தால் அன்பர்களுக்கே பாவநாசர்

பாவநாசர் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பாவநாசர் பக்தர்க் கருளும் கருணை மயமான பெருஞ்சோதி
பாவநாசர் புகழ்பாடி பாவத்தை நாசம் செய்து மீள்வோமே
பாவநாசர் ஈசுவரன் கங்கைகொண்டான் தோணியப்பரே

தோணியப்பர் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தோணியப்பர் பற்றியதால் நாவுக்கரசராகி ஞானம் பெற்றாரே
தோணியப்பர் அருளால் ஞானப்பாலுண்டு சம்பந்தர் தேறினாரே
தோணிபோல் காணுடா அந்தவீடு சுந்தரமே

சுந்தரம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சுந்தரர் பித்தனே என்றழைக்க அருள்புரிந்தோனே
சுந்தரமா வதுதுதிக்க படுவது திருவால வாயன் திருநீறே
சுந்தரம் சுடரே சோதியே சூழ் ஒளிவிளக்கே

ஒளிவிளக்கே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஒளிவிளங்க உணர்வு தந்தருள் ஓங்காரப் பொருளே
ஒளிவிளக்கு என்னுள் சுடர்விட்டு பிரகாசிக்க செய்யே
ஒளிவிளக்கே மணிவிளக்கே தூண்டாவிளக்கே மாணிக்கமே

மாணிக்கம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மாணிக்க வாசகருக்கு மணிவாசகம் உரைத்த சொக்கா
மாணிக்கம் போல் மணியில் மின்னும் இன்ப மாதுறை உறைவோனே
மாணிக்கம் பன்னிரு திருமுறையுமே மூலமே

மூலம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மூலமாய் அனைத்திற்கும் முழுமுதலாய் ஆனவனும் நீயே
மூலப்பொருளே ஒளியே கண்வழிபுகுந் தென்கருத்தமர்ந்தாயே
மூலன் உரைத்தான் திருமந்திரமே முதலே

முதலே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
முதலாய் உனைவைத்து மோட்சமாம் பெற எனக்கருளே
முதல் இல்லாது வியாபாரம் எது முனிபுங்கவருக்கும்
முதல்வன் நீயன்றோ ஆதிமூலமே முடிவே

முடிவும் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
முடிவும் வாழ்வில் எஞ்சி நிற்பது சிவமாய் சிவன் நீயன்றோ
முடிவும் ஆரம்பமும் உனையன்றி வேறு யாருமில்லை
முடிவு வராமல் எனக்கருள் மௌனமே

மௌனம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
மௌனம் கண்ணே பார்த்தும் பேசாதது கண்ணில் கருத்துவையே
மௌனமாய் இருந்துதானே உன்னோடு பேச முடியும் அருள்வாயே
மௌனத்தில் நானிற்க என்று மருள் சூட்சமமே

சூட்சமம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சூட்சமத்தில் இருக்கிறது மோட்சம் என தெரிவிக்க செய்தாயே
சூட்சமமாக கண்ணில் இருந்துகொண்டு காத்தருள்வோனே
சூட்சமம் தனையறிய உதவியருளே அட்சயமே

அட்சயம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
அட்சய பாத்திரம் போலவற்றாத அருள்கொடுப்போனே
அட்சம் கண் என அறிவித்தெனை ஆண்டுகொண்டவனே
அட்சயமாய் நானுமிருக்க அவனியிலருள் பொற்பதமே



பொற்பதம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பொற்பதம் பொன் வண்ணம் திவண்ணம் உத்தன் வண்ணமே
பொற்பதந் தனைக் காண புண்ணியனே புராந்தகனே பசுபதியே
பொற்பதம் காட்டி இருந்தருளே பூம்பதமே

பூம்பதம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பூம்பதம் இணையான இருகண்களே கண்மலராகிய திருவடி
பூம்பதம் தனைப்பற்றி பூம்பாவை உயிர் மீட்டான் சம்பந்தனே
பூம்பதம் எனக்கருள் கமலநயனமே முக்கண்ணனே

முக்கண்ணன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
முக்கண்ணன் சிவன் முழுமுதற் கடவுளானவனேசோதி
முக்கண்ணன் அருளால் கண்ணப்பினான் கண்ணப்ப நாயனாரே
முக்கண்ணன் முதிர்ந்து முருகனான கனியே

கனியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
கனியே கருநெல்லி கனியே கண்ணே கனிவுடன் காட்டே
கனியே கரும்பே கரும்பூவே கனிரசமே அருளே
கனியே பழம் நீயே கனியவையே எங்கோவே

எங்கோவே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
எங்கோவே தனையாள் உழலும் எனை பார்த்தருளே
எங்கோவே தநாயகன் இல்லை எங்கும் இருக்கின்றனவனே
எங்கோவே தான் எனை ஆளும் ஈசன் தலைவன்

தலைவன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
தலைவன் ஒருவன் இருக்கின்றான் தத்துவமனைத்துமாகி
தலைவன் சிரஉறை தலமே கண்ணே தலைமியாய் என்னை
தலைவன் நீ ஏற்று கொள் தங்கமே எல்லாம் வல்லவரே

எல்லாம் வல்லவரே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
எல்லாம் வல்லவரை பற்றிக் கொண்டால் எல்லாம் கிடைத்திடுமே
எல்லாம் வல்லவன்எங்கும் நிறைந்தவன் அருட்பெருஞ்சோதியே
எல்லாம் வல்லவனை அடைய நுழைவாயில் திருவடியே

திருவடியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
திருவடியே சிவமாவது இரு கண்ணே செல்கதி காட்டுவது
திருவடியே சரணம் என புகுந்தால் சாகாதிருக்கலாமே
திருவடியை சேர்வதே சிறப்பென்றாய் திருவருட்சீரே

திருவருட்சீரே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
திருவருட்சீரே இறைவன் அருளால் கொடுத்தசீரே இரு கண்கள்
திருவருட்சீர் கொண்டு சென்றாலே புகுத்த வீட்டில் பெருமையாம்
திருவருட்சீரே நாம்புகும் வீடுவாசலாம் நயனமே

நயனமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவரே
நயனம் இரண்டினுள் நாட்டமிருப்பில் நமனை வெல்லலாமே
நயனம் மந்திரம் வெட்டாத சக்கரம் எட்டாத பட்டம்
நயனமே பற்றற்றது சோதியிருக்குமிடம் ஐந்தெழுத்தே

ஐந்தெழுத்தே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவரே
ஐந்தெழுத்து நமசிவய பஞ்சபூதமே ஐந்தும் சேர்ந்த இடமே
ஐந்தெழுத்து முதலிய எல்லா மந்திரமும் ஒத்த இடமான கண்ணே
ஐந்தெழுத்தில் நடுவெழுத்தை பற்றி ஏறே திரு உந்தியாரே

திரு உந்தியாரே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவரே
திரு உந்தியார் திருவானது உந்தியிருக்கும் கண்ணில் உள்ளதே
திரு உந்தியார் என அறிந்து தேர்ந்துகொள் உன்தீயை பெருக்கியே
திரு உந்தியாரே வந்தருள் தந்திடுவாரே உள்ளொளியே

உள்ளொளியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவரே
உள்ளொளி பெருக்கி ஊனினை மாற்றி ஒளியுடல் பெறலாமே
உள்ளொளி கண்டால் ஓடுமே வினை பற்றிடுவாய் பரமனை
உள்ளொளி காணவே ஓயாது உழை நண்பனே

நண்பன் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
நண்பனாய் தாயாய் தலைவனாய் சற்குரு வானசோதி நீயே
நண்பனாய் என்னுடன் இருந்து ஞானசபை சிறக்க அருள்புரியே
நண்பனே என்னுயிர் காப்பாய் நீயே இருதயமே

இருதயமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
இருஉதயம் இருகண் சூரிய சந்திரனே சிவசக்தி மயனே
இருதயம் சுத்தமாக நீரால் நினைந்து தெளிந்து கழுவ வேணுமே
இருதயம் சுத்தமானால் அதுஇறைவன் ஆலயமே

ஆலயம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஆலயம் தொழுவது சாலவும் நன்று ஔவை சொன்னாளே
ஆலயம் கோவில் இறைவனிருப்பிடம் லயமானால் கிட்டிடுமே
ஆலயம் ஞானிகள் அருளுமிடமே அம்பலமே



அம்பலம் நீதானே அருட்பெருஞ் சோதிஆண்டவனே
அம்பலத்தில் ஆடுகின்றார் சோதி என்றாரே அருட்பிரகாச வள்ளல்
அம்பலம் இரகசியமல்ல கண்மணியிலே சோதி கலந்து நிற்பது
அம்பலம் ஆனந்தம் திருச்சிற்றம்பலமே சிவ போகமே

சிவபோகமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சிவபோகம் தவிர்த்து பாவபோகக்கொண் டால் பாழாகுமுடலே
சிவபோகம் செய்து பாவவினை நீக்கி பண்படலாம் மனே
சிவபோகமே நாளும் வேண்டுகிறேனே சிவானந்தமே

சிவானந்தம் நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
சிவானந்தம் பெற்றால் செல்வமாகுமே சீரோடு சிவத்துடன்
சிவானந்தம் நல்குமே சச்சிதானந்தமே பவசாகரம் கடந்திட
சிவானந்தம் நாம் பெற வேண்டுமையா ஞானமே

ஞானமே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
ஞானம் ஏதெனில் தான்தனையறிந்து அம்மய மாதலே
ஞானம் விரும்பினால் ஞாலம் விரும்பாமை நன்றென்றனரே
ஞானம் சமநிலையால் கூட்டுவிக்குமே பெருஞ்சோதியே

பெருஞ்சோதியே நீதானே அருட்பெருஞ் சோதி ஆண்டவனே
பெருஞ்சோதியே நீதானே எல்லாம் வல்லான் எங்கும் நிறைந்தவன்
பெருஞ்சோதி முத்திரையை பேணிக்கூட எனக்கருள்வாயே
பெருஞ்சோதியே ஆண்டவனே நீயல்லவோ ஆதியுமந்தமுமே

## நிறைவு

அந்தாதி பாடவைத்து அருள் புரிந்தாயே
இந்தாதி காவியம் என சோதி தந்தாயே
பந்தாதி எலாம் எனை பாராட்ட அருளினாயே
எந்தாதி என இருந்து வளர்த்து ஆளாக்குவாயே.

**ஓம் ஸ்ரீம் இராமலிங்கம் ஜெயம்**

# சிந்திப்பவனே மனிதன்!

பினாமி பெயரில் பூமியிலே சொத்துக்களை வாங்கி குவிக்கும் கனவான்களே, சுனாமி வந்தால் கண் இமைக்கும்முன் கைலாசம் போய் விடுவீர்கள். 'மரக்கறி உணவே மனிதகுல உணவு'. காய்கறி, கனி உண்டு வாழ்ந்தாலே நமக்கு கனிவு பிறக்கும். சக்தி பிறக்கும். சாத்வீகமே, அன்பே, கருணையே நம்மை கடவுளிடம் சேர்ப்பிக்கும். அறிவை மயக்கும் மது, புகையிலை வகையறாக்களை தவிர்ப்பதே அறிவுடைமை!

"பரிபூரண அறிவே ஞானம்"
"கொல்லான், புலாலை மறுத்தானை எல்லா
உயிரும் கைகூப்பித் தொழும்"

அன்பும் பண்பும் உள்ளவனிடமே அறிவு இருக்கும். அறிவுள்ளவனே மனிதன். இறைவன் எங்கோ எட்டாத உயரத்தில் இல்லை! நமக்கு எட்டுகின்ற இடத்தில்! எட்டாக - இரண்டாகவே உள்ளான்! நாம் அவனை எட்டிப் பிடிக்கவேண்டும்! தட்டிப் பாருங்கள் உணர்வால்! சிந்தனையை தட்டி சிறகடித்துப் பறக்காமல் சிந்தனையை அடக்கி "சும்மா இருக்க" வழி பாருங்கள். விழியைப் பாருங்கள்! விழித்திருந்து தான் பார்க்க வேணும்! கண்ணை மூடினால் மரணம். கண்ணாடி போன்ற நம் கண்ணே எந்தப் பற்றுமின்றி நம் இறைவனான ஆத்மாவை சுமந்து கொண்டுள்ளது. கண்ணின் மணியை கருதிப் பார்ப்பதே ஞானம் பெற வழி பசித்திரு, தனித்திரு, விழித்திரு.

கண்ணின் மணியில் கலந்து ஒளியாய் நின்ற அவனே நம் கண் கண்ட தெய்வம். முதலில் நாம் காணவேண்டிய தெய்வம். கண்ணாடி கண்டு தொழுதால் கலி தீரும் கண்ணாடி போன்ற கண்ணை கண்டு அதில் துலங்கும் ஒளியை தொழுதால் கலியாகிய நம் இருவினைகளும் தீரும்!

பிறவியாகிய பிணி நீங்க - நம் இரு வினைகள் அகலவேண்டும். அதற்கு கண்ணில் - மணியில் - ஆடும் ஜோதியை உணர்ந்து சும்மா இருப்பதுவே ஒப்பற்ற ஞான வழி. சும்மா இருப்பதுவே சுகம். சாமியார்களின் உபதேசங்களை விட்டுத் தள்ளுங்கள். நம்மை நாம் உணர, சாமியே சொன்ன உபதேசம்! வழி! செயல்படுங்கள்.

சனகாதி முனிவர்களுக்கு தட்சிணாமூர்த்தியாக வந்து இறைவன், இருந்ததனை இருந்தபடி இருந்துதானே உணர்த்தினார்! சொல்லாமல் சொன்னவரை, சும்மா இருக்க சொன்னவரை உணர்த்தியவரைத் தான் நாம் தொடரவேண்டும். முருகப் பெருமானே அருணகிரிநாதருக்கு உபதேசித்தது சும்மா இரு என்று தானே!

ஆறாயிரம் திருவருட்பாக்களை பாடி ஆறாகவே இரும் என நமக்கு சொல்லி விழியை இன்றும் உணர்த்தும் வள்ளலார் முதல் பாடலே சும்மா இருக்கும் சுகம் இன்று வருமோ என்று தானே!

எனவே சும்மா இருங்கள்!



## ஞானதானம் செய்க!

"தானமும் தவமும்" தான் மிக மிக அரிதான செயல் என ஔவையார் கூறியதை சிந்திக்கவும்!

அரிதான மானிட தேகம் பெற்ற நாம் அதி உன்னதமான தானமும் தவமும் செய்தலே அரிதினும் அரிதானது!

எல்லாம் வல்ல இறைவன் - எங்கும் நிறைந்த இறைவன் நம்மிலும் இருக்கிறார்!

மனித தேகத்தில் கண்ணில் ஒளியாக இறைவன் நின்று அருள்பாலிக்கிறார்!

எல்லா ஞானிகளும் உலகத்தவர்களுக்கு உரைத்த சத்தியம் இதுவே!

இம்மாபெரும் உண்மையை, இதுவரை உலகத்தவர் உணராது மறைத்து விட்டனர் பலர்!

உலக மக்கள் படும் துயர் கண்டு வருந்தி, பிறவிப் பிணியிலிருந்து மக்களை மீட்க, எல்லோருக்கும் ஞான பாதையை எளிதாக உபதேசித்து அருளினார் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகள்!!

அடியேன் கன்னியாகுமரி சிவ செல்வராஜ் சற்குரு வள்ளலார் வழியில் நாடி வருவோருக்கு ஞானதீட்சை வழங்கி வருகிறேன்!!

"இறைவன் - நாம்"

பற்றிய எல்லா இரகசியங்களையும் பரிபாஷைகளையும் தெளிவாக விளக்கி **கண்மணி மாலை - அருள்மணி மாலை** என 28 புத்தகங்கள் வெளியிட்டுள்ளோம்!

படியுங்கள்! பலனடையுங்கள்!!

பிறருக்கும் வாங்கி தானம் செய்யுங்கள்!

ஞான நூற்களை தானம் செய்க!

தானத்தில் சிறந்தது ஞான தானமே!

"கண்மணி மாலை" "அருள்மணி மாலை" தானம் செய்க!

"திருவடி தீட்சை" பெற்று தவம் செய்க!!



உலகை உய்விக்கும் "சனாதன தர்மமே!"
வள்ளலார் காட்டிய "சன்மார்க்கம்!"
சன்மார்க்க சற்குரு சிவ செல்வராஜ்
வள்ளலார் வழிகாட்டிய "விழி" காட்டுவார்!
"மரணமிலா பெருவாழ்வு" பெற வாரீர்!

அகரமாகி நின்று ஒளிரும் கண்ணே
ஆதியே மூலமே செல்வமே கண்ணே
இரு கண்களையும் ஒன்றாக்கிய செல்வமே
ஈன்று எடுத்த செல்வமே கண்மணியே
உருவாக வடிப்பது கண்ணே மலரே
ஊன்றிப் பார்த்தால் மலரும் கண்ணே
எங்கும் எதிலும் ஒளி வெள்ளமே
ஏகம் அனேகம் பரவெளியே கண்ணே
ஐயம் தெளிந்திட நோக்கே மணியை
ஒன்றும் இரண்டாகி நின்ற ஒளியே
ஓதுவாய் திருவடியை ஒளிரும் மெய்யே
ஔகாரமாய் அகரமாய் நின்றிலங்கும் கண்ணே
அஃது உணர்ந்தால் காண்பதெல்லாம் ஒளியே.

- பணிவுடன்
**தங்கம் சிவ செல்வராஜ்**





ஞானசற்குரு சிவசெல்வராஜ்



வள்ளலார் அருளிய S.S. சுயம்ஜோதி

## ஸ்ரீ வாலைத்தாய்





S.S.சுயம் ஜோதி - சிவசெல்வராஜ் - தங்கம்









தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை









தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை










திருவடி உபதேசம் பெற்றவர் மெய்யுணர்வு பெற திருவடி தீட்சை பெற தங்க ஜோதி ஞான சபைக்கு வருக! உங்கள் நடுக்கண்ணை திறந்து ஞானம்பெற வழிகாட்டுவார் வள்ளலார்! கண்ணை திறந்து தான் தவம் செய்ய வேண்டும்!